திராவிடநாடு

24–4–60 | வார வெளியீடு | விலை 16 காசு

நெஞ்சம் பதைக்கின்றதே!

—(தமிழவேள்)—

நெஞ்சம் பதைக்கின்றதே—தமிழர்
    நிலையினைப் பார்க்கையிலே!
அஞ்சி அயலவரின்—ஏவல்
    அடிமையராய் விளங்கிக்
கஞ்சியும் கால் வயிற்றுக்(கு)—அந்தோ
    கிட்டா தலைந் தழியும்
பஞ்சைப் பனுதியராய்த்—தமிழர்
    பாரினில் உள்ளனரே!   (நெஞ்)

காலை முதலாக—மாலைக்
    காரிருள் தோன்று மட்டும்
கூலிக் குழைத் தயர்ந்து—கொஞ்சம்
    கூழைக் குடித்துவிட்டு
சாலையின் ஓரத்திலும்—தெருச்
    சாக்கடையின் அருகும்
ஓலைக் குடிலுமின்றித்—தரையில்
    உறங்குகின்றனரே!   (நெஞ்)

கட்டியிருக்கும் துணி—முழுக்
    காலுக்கு மேலிருக்க
எட்டு இடங்களிலே—அந்த
    இரண்டு முழத் துணியில்
பட்டிருக்கப் பொத்தல்—மெய்க்குப்
    போர்த்திட ஏதுமின்றிக்
கட்டையென விளங்கும்—மனிதக்
    கூட்டம் இந் நாட்டிலன்றோ?   (நெஞ்)

எச்சில் இலையொன்று—தெருவில்
    எறியப் படினுடனே
நச்சிக் கவர்ந்திடவே—வரும்
    நாயுடன் போராடி
மிச்சமாம் எச்சிலையின்—அதை
    மானிடர் தின்னுகின்ற
செச்சே! இழி காட்சி—இந்தச்
    சீர் கெடும் நாட்டிலன்றோ?   (நெஞ்)

வாட்டும் கடு வெயிலில்—கால்கள்
    வெந்தவை கொப்பளிக்கப்
போட்டுக் கொள் உடையில்—உடல்
    புழுங்கி வியர்த் தொழுகப்
பாட்டுக் கெனப் பிறந்தே—மிகப்
    பாரம் நிறை வண்டியை
மாட்டினைப் போலிழுத்துச்—செல்லும்
    மக்களும் இங்குளரே!   (நெஞ்)

செய்து பிழைத்திடவே—ஏதும்
    வேலை கிடைக்காமல்
வெய்ய கடும்பசியால்—வாடி
    எங்கெங்கு நோக்கிடினும்
அய்யோ! பெருங்குழுவாய்ச்—சிறுவர்
    ஆடவர் பெண்டி ரெலாம்
கைகளை யேந்தி யழும்—பிச்சைக்
    காரரின் காட்சியன்றோ?   (நெஞ்)

சோற்றுக் கொரு வழியும்—தங்கள்
    சொந்த நாட்டிலில்லாமல்
வேற்றுப் பிற நாட்டார்—இங்கு
    வந்து பணம் பெருக்க
ஏற்றமில்லாத் தமிழர்—வெளியில்
    ஏங்கித் தவித்தழுது
மாற்றார் கொடுமைசெய—ஏனோ
    மண்டியிட்டுக் கிடத்தல்?   (நெஞ்)

கொல்லும் பலிக் களத்தில்—தழையைக்
    கட்டிக் கழுத்திலிட
நல்லது; நம் உணவே—என்று
    நம்பி மகிழ்ந்தாரும்
கல்லா மறி யொப்பவே—பொல்லார்
    கூறிடும் கட்டுரையை
நல்ல தெனக் கொண்டே—தமிழர்
    நம்பி அழிந்திடுதல்!   (நெஞ்)

ஒன்றுப் உடன் பிறந்தோர்—உலகில்
    யாவரும் நம் கேளிர்
என்னும் அருங்கொள்கை—நாட்டி
    இன்புடன் வாழ்ந்திருந்த
அன்புத் தமிழர் வழி—வந்தோ
    ரான இந்நாட்டினர் தாம்
அன்பழித் தொற்றுமையே—இன்றி
    அல்லற் படல் கொஞ்சமோ?   (நெஞ்)

கல்வி சிறந்தறிவை—வேட்கை
    கொண்டு தன் மானத்துடன்
பல்லோர் இவண் சுரண்ட—நாடு
    பாழாம் நிலை தவிர்ந்து
வல்லுநராய் எந்தத்—துறையும்
    வெற்றி மிகத் தமிழர்
செல்வ வளமாரத்—தோன்றிச்
    சீருடன் வாழ்வதென்றோ?   (நெஞ்)

பெர்லின்

"எந்த ஒரு உலகப் போராயிருந்தாலும், பெரும் அரசியல் குழப்பமாயிருந்தாலும் அது ஜெர்மனியால் அல்லது ஜெர்மனிக்காக அல்லது ஜெர்மனிமீது எழுந்ததாகத்தான் இருக்கும்'' என்று உலக அரசியல் சரித்திரத்தைப்பற்றிக் கூறுபவர்கள் சுருக்கமாகச் சொல்லுவார்கள். ஆனால் இதுதான் மாபெரும் உண்மையும் அனுபவமும்கூட. ஜெர்மனி ஏதோ ஒரு வகையில் உலக நாடுகளின் அரசியல் சரித்திரத்தில் முக்கியத்துவம் பெற்றதாகிவிட்டது. ஹிட்லரை அறிந்தவர்கள் எல்லோரும் ஜெர்மனியை அறிவார்கள்; ஜெர்மனியை அறிந்தவர்களெல்லோரும் ஹிட்லரை அறிவார்கள். ஹிட்லர்—ஜெர்மனி என்ற இரு சொற்களும் இன்றளவும் உலக மக்கள் நினைவிலெல்லாம் பதிந்திருக்கும் சிறப்புத் தன்மை பெற்றவையாகிவிட்டன.

ஹிட்லர் கனவில்கூட நினைத்திருக்கமாட்டான், தனக்குப் பின் ஜெர்மனி இன்றுள்ள நிலையை அடையும் என்று. ஜெர்மனியின் தலைநகரான பெர்லினில் இருந்தபடியே ஐரோப்பாவையே தன் காலடியில் கொண்டுவந்துவிடலாமென்று எண்ணிய அவனுக்குக் கிடைத்த முடிவே அவனது நாட்டிற்கும் கிடைத்தது. இரண்டாவது உலகப் போர் பெரும் பொருட் சேதத்தையும் உயிர்ச் சேதத்தையும் மட்டுமே விட்டுச் செல்லவில்லை, இன்று மட்டும் விடுவிக்க முடியாத பல பெரும் அரசியல் குழப்பங்களையும் உண்டாக்கிவிட்டுச் சென்றது. அவைகளுள் ஒன்றுதான் ஜெர்மனி விவகாரமும், அதனுள் அடங்கிய பெர்லின் பிரச்சினையும்.

இரண்டாவது உலகப்போர் ஜெர்மனியை இரண்டுபடுத்தியது. 'மேற்குத் திசை''யும் "கிழக்குத் திசை"யும் ஜெர்மனியை இரு பகுதியாகப் பிரித்து ஆளுக்கு ஒன்றாக எடுத்துக்கொண்டன. மேற்கு ஜெர்மனிக்குப் பின்னால் அமெரிக்காவும் பிரிட்டனும் பிரான்சும் நின்றன. கிழக்கு ஜெர்மனிக்குப் பின்னால் சோவியத் இரஷ்யா நின்றது. 1949-ம் ஆண்டுக்குப் பின்னர் மேற்கு ஜெர்மனி, ஜெர்மன் பெடரல் ரிபப்ளிக் என்ற புதுப் பெயரில் தனி நாடாகியது. ஆனாலும் அமெரிக்கா மற்றும் அதன் துணை நாடுகளின் 'பின்பலம்' நின்றுவிடவில்லை. அதன் பலனாக நேட்டோ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஒரு நாடாகியது. 1949-ம் ஆண்டுக்குப்பின் கிழக்கு ஜெர்மனியும் 'ஜெர்மன் டெமாக்ரடிக் ரிபப்ளிக்' என்ற புதுப் பெயரில் தனி நாடாகியது. என்றாலும் இரஷ்யாவின் 'பின்பலம்' நின்றுவிடவில்லை. அதன் பலனாக வார்சா ஒப்பந்த உடன்படிக்கையில் ஒரு உறுப்பு நாடாக அமைந்தது. எனவேதான் பெயர் மாற்றத்தைக்கொண்டு தனி நாடுகளாகியும், மேற்குஜெர்மனி என்று 'மேற்குத் திசை'யையும், கிழக்கு ஜெர்மனி என்று 'கிழக்குத் திசை'யையும்தான் நினைவில் வைத்துக்கொண்டு வழக்கில் சொல்லப்படுகிறதேயன்றி, அந்த இரு பகுதிகளும் இரு தனிச் சுதந்திரமுள்ள நாடுகள் என்ற எண்ணம் எங்கும் எப்பொழுதும் எவருக்கும் இயற்கையாகக்கூடத் தோன்றுவதில்லை. மேற்கு ஜெர்மனி என்றால் அமெரிக்கா உடனே அனைவரது நினைவுக்கும் வரும்; கிழக்கு ஜெர்மனி என்றால் எவரும் இரஷ்யாவைப்பற்றி எண்ணத் தவறமாட்டார்கள். ஜெர்மனியைப் பற்றிய இன்றைய பொதுவான அடிப்படை இதுதான்.

அன்பு

பெர்லின் — பரிதாபத்துக்குரிய பழைய தலைநகரம்! இரண்டாவது உலகப் போரின் மூலம் ஜெர்மனி அடைந்த முடிவைக் காட்டிலும் பன்மடங்கு பெரிய அளவில் அடைந்த ஒரு பிரச்சினைக்குரிய நகரம் பெர்லின். போரின் மூலம் நாடே துண்டுபட்டு இரண்டுபட்டது. ஆனால் நாட்டின் தலைநகரமான பெர்லினோ அதனினும் அப்பாற்பட்ட நிலைக்கு இழுத்துச் செல்லப்பட்டது. ஹிட்லரது உடல் அழிந்ததுபோல் பெர்லினும் ஒரு தலைநகரம் என்ற நிலையினின்றும் அழிக்கப்பட்டது. அதன் தலைநகரத்தை எப்பக்கமும் முழு அளவில் சேரவிடாமல் விட்டுவிட்டு ஜெர்மனி மேற்காகவும் கிழக்காகவும் பிரித்துச் செல்லப்பட்டது.

ஜெர்மனி ஒன்றாயிருந்தபோது அதன் மதிப்பிற்குரிய தலைநகரமாயிருந்த பெர்லின், போருக்குப்பின் நான்கு நாடுகளின் ஆக்கிரமிப்பு இடமாய் மாறியது. இரஷ்யாவால் பிரித்துக்கொள்ளப்பட்ட கிழக்கு ஜெர்மனியின் எல்லையோரத்திலேயே பெர்லின் இருந்தபோதிலும், அமெரிக்கா, இரஷ்யா, பிரிட்டன், பிரான்சு ஆகிய நான்கு சக்திகளுமே அதனைப் பங்குபோடத் துவங்கின. 1945-ம் ஆண்டில் ஜெர்மனி வீழ்ச்சியுற்ற பின்னர், நான்கு நாடுகளின் இராணுவ அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஒப்பந்தப்படி அதே ஆண்டு போட்ஸ்டாம் என்ற இடத்தில்கூட நான்கு பிரதமர்களும் கூடிப் பெர்லினைத் தங்களுக்குள்ளாகவே பிரித்து ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டனர். ஜெர்மனி வீழ்ச்சியுற்ற பின்னர் இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, 1949-ல் மீண்டும் பெயரளவிலாவது தனி நாடுகள் என்ற நிலையை

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (24—4—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 41

ஐந்தல்ல—ஒன்றுதான்!

நமது மாகாணத்தில் மருத்துவக் கல்லூரியிலோ, பொறியியற் கல்லூரியிலோ மாணவர்கள் சேருவதில், அவர்கள் படும் தொல்லைகள், ஏற்படும் இடையூறுகள் ஏராளம். ஒரு மாணவன் மேலே குறிப்பிட்ட இரண்டு கல்லூரிகளில் எந்த ஒன்றில் சேரவேண்டுமானாலும், அந்த மாணவன் எடுக்கும் முயற்சிகள், பிடிக்கும் சிபாரிசுகள், நாடும் உதவிகள் கணக்கில் அடங்கா. இவற்றிற்கெல்லாம் காரணம், கல்லூரிகளில் போதிய இடம் இன்மையென்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. அளவுக்கதிகமாக மாணவர்கள் போய்க் குவிவதால், கல்லூரிகளில் இடமில்லை என்ற சமாதானம் சொல்லப்படுகிறது.

கல்லூரிகளில் இடமில்லாது போகவே, மாணவர்கள் இடம் பிடிப்பதில் ஈடுபட்டு, அதற்குத் தேவைப்படும் முயற்சிகளை எடுத்துப் பார்க்கிறார்கள்.

இது இன்றுள்ள நிலை. இந்தப் பரிதாபகரமான நிலை ஒரு புறமிருக்கட்டும். இன்னொரு பரிதாபகரமான நிலையும் நமது மாகாணத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் 75 இடங்கள் காலியாகவே உள்ளனவாம்.

நமது மாநில உடல்நலப் பாதுகாப்பமைச்சர் தரும் புள்ளி விபரம்தான் இது.

மருத்துவர்கள் இல்லை; எனவே மருத்துவ மனைகள் காலியாக உள்ளன.

கல்லூரிகளில் இடம் இல்லை: எனவே மாணவர்கள் கவலையாக உள்ளனர்.

இந்த இரண்டு நிலைகளும் சிறிதளவாவது ஒன்றையொன்று சந்திக்க முடிகிறதா, பாருங்கள்.

இந்த விசித்திரமான — வேதனையான நிலையை இங்கன்றி வேறெங்காவது காணமுடியுமா?

மருத்துவர் இல்லை, எனவே மருத்துவமனை காலியாகக் கிடக்கிறது. கல்லூரியில் இடமில்லை, எனவே மாணவர்கள் வெளியே நிற்கின்றனர்.

தேவையான அளவுக்கு மருத்துவர்களை உண்டாக்கும் கல்லூரிகளை அடைத்துவைத்துக்கொண்டு, அதே நேரத்தில், மருத்துவர்கள் இல்லாததால் மருத்துவமனைகளை அடைத்து வைத்திருப்பது போன்ற யோசனையற்ற செயல் வேறெதுவும் இருக்க முடியாது.

நாட்டின் தேவையை முன்கூட்டியே தெரிந்து வைத்துக்கொண்டு, அதற்கேற்பக் கல்லூரிகளை அகலப்படுத்தி, மாணவர்களைத் தாராளமாகச் சேர்த்துக்கொள்ளும் முறையை விரிவுபடுத்தினால் இந்தப் 'பஞ்சம்' ஏற்பட்டிருக்காதே!

இந்தப் பஞ்சத்திற்கு அமைச்சர் கூறும் காரணங்கள் ஐந்து:—

1. சர்க்கார் சர்வீசில் சம்பளம் குறைவு.
2. தனியார் நடத்தும் ஆஸ்பத்திரிகளில் சம்பளம் அதிகம்.
3. தனியாகத் தொழில் நடத்தினால் நல்ல வருவாய் கிடைக்கிறது.
4. கிராமங்களுக்குச் சென்று பணிபுரியப் பிரியமின்மை.
5. மேல் பதவிகளுக்குச் செல்வதற்குரிய வாய்ப்புகள் குறைவு.

அமைச்சரால் கூறப்படும் இந்த ஐந்து காரணங்களும் தீர்க்கமுடியாதவை அல்லவே! சர்க்கார் நினைத்தால்—விரும்பினால் எளிதாகத் தீர்க்கக் கூடியவைதாம் இவை.

ஐந்து காரணங்கள் என்று அமைச்சர், பிரச்சினையை மூடி மறைப்பதற்காகப் பிரித்துப் பிரித்துக் காட்டி விளக்கம் தருகிறாரேயொழிய, உண்மையில் காரணங்கள் ஐந்தில்லை. ஒன்றுதான். சம்பள உயர்வு ஒன்றுதான் இத்தனைக்கும் காரணமாக உள்ளது.

இப்போது தருவதைவிடச், சிறிது அதிக சம்பளம் தரச் சர்க்கார் முன்வந்தால், எந்த மருத்துவரும் தனித்தொழில் நடத்தவோ, தனியார் நடத்தும் தொழிலுக்குப் போகவோ, கிராமப்புறங்களுக்குப் போகமாட்டேன் என்று கூறவோ மாட்டார்கள்.

அரசாங்க மருத்துவர் (Government Doctor) என்றால், அதற்கொரு தனிச் சிறப்பும் மதிப்பும் உண்டென்பதை அறியாதவர்களல்ல அவர்கள். எனவே, அமைச்சர் காரணங்களைக் காட்டி, காரணத்தை ஒன்று இரண்டு மூன்று என்று பெருக்கிக் காட்டி, இதனால்தான் மருத்துவர்கள் போதிய அளவு கிடைக்கவில்லை என்று கூறுவதைவிடுத்து, உண்மையான அந்த ஒரு காரணத்தைத் தீர்த்து வைத்து மருத்துவர்களுக்கு உற்சாகமூட்டி இந்தப் பஞ்சத்தைப் போக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

எத்தனையோ வகையான பண விரயங்கள் சர்க்கார் துறையில் நடப்பதை அவ்வப்போது தணிக்கையாளர்களின் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. தேவையற்ற துறைகளை வலிந்து உண்டாக்கி அவற்றிற்காக இலட்சக்கணக்கில் பணம் செலவிடப்படுகிறது. இவைகளை அளவுபடுத்தி — மட்டுப்படுத்தி மருத்துவர்களின் சம்பளத்தை உயர்த்தலாம்.

வேண்டப்படாத — விரும்பப்படாத — தேவைப்படாத துறைகளுக்குச் செலவிடும் பணத்தில் ஒரு

பகுதியை, நாட்டுக்கு மிகமிக இன்றியமையாது தேவைப்படும் மருத்துவத்துறைக்குச் செலவிடலாம். உடல் நலம் பேணி நாட்டு நலம் பேணும் இந்தப் பணிக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவிடலாமே இதில் சிக்கனம் காட்டும் சிரத்தையற்ற போக்கு விரும்பத்தக்கதல்ல.

அதோடு, மாணவர்களைக் கல்லூரிகளில் சேர்க்கும் சிக்கனம் இருக்கிறதே, இது விரும்பத்தக்கதல்ல என்று கூறுவதைவிட, மிகமிக வெறுக்கத்தக்க ஒன்று என்று கூறினால், அது மிகைபடக்கூறிய தென்று மதிப்படைந்த எவரும் கூறமாட்டார்கள்.

எனவே, மருத்துவர்களின் பஞ்சத்தைப் போக்குவதற்கு நாம் காட்டும் காரணங்கள் இவைதான்.

1. மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைத் தாராளமாகச் சேர்த்துக்கொள்வது.
2. மருத்துவர்களுக்கு நல்ல ஊதியம் தருவது.

இதைவிடுத்து, ஒரு காரணத்தையே ஐந்து காரணங்களாகக் காட்டித் தட்டிக்கழிப்பது சரியல்ல, முறையுமல்ல.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி.

அடைந்தன. பெர்லின் நகரம் மட்டும் மேலும் மேலும் நான்கு சக்திகளின் ஆக்கிரமிப்பு இடமாகத்தான் மாறிக்கொண்டுவந்தது. இரஷ்யாவுக்கும் அமெரிக்கா மற்றும் அதன் துணை நாடுகளுக்கும் பெர்லின் பற்றிய சிக்கல்கள் நாளடைவில் தோன்றி வளர்ந்துவந்தன. இரஷ்யா ஒருபக்கமும், அமெரிக்கா மற்றும் அதன் துணை நாடுகள் ஒருபக்கமாகவும் பிரிந்தன. ஒருசக்தி மற்றொரு சக்தியால் எந்த நேரமும் ஆக்கிரமிப்பு நேரலாம் என்று எச்சரிக்கையோடு இருக்க நேர்ந்தது. இதன் பலனாகப் பெர்லினில் அதன் மக்கள் சக்தியையும் மிஞ்சும்வகையில் இராணுவவீரர்கள் கொண்டுவந்து வைக்கப்பட்டனர். அவர்களுடனேயே ஆயுதங்களும் அணுகுண்டுகளும் வந்தன. ஆயுதத் தளவாடங்களும் ஆகாய விமான நிலையங்களும் இருசக்திகளாலும் ஏற்படுத்தப்பட்டன. அந்நகரமக்கள் வீதிகளில் நடப்பது போல் பெர்லினில் பல நாடுகளின் இராணுவ வீரர்கள் பவனிவரலாயினர்.

உலகப் போரால் ஜெர்மனி இருநிலை அடைந்தது; அதன் தலைநகரமான பெர்லினோ பலநிலை அடைந்தது. இது அவையிரண்டின் அரசியல் பின்னணி. ஆனால் அவைகளின் மாற்றங்கள் அந்த இரண்டு பகுதிகளைப் பாதித்ததோடு நின்றுவிடவில்லை. உலகப் போரின் பலன் ஜெர்மனியில் நின்றது; ஜெர்மனியின் பலன் திரும்பவும் உலகத்தையே பாதிக்க ஏதுவானது. ஜெர்மனி இரண்டுபட்டதால், உலகமும் இரண்டுபட்டதற்கான பல காரணங்களுள் ஒரு முக்கிய காரணமாய் அமைந்தது.

சமீபகாலமாக எல்லோர் நாவிலும் அடிபடும் "போர் எண்ணம்" என்ற சொல் எழுவதற்கே ஒரு முக்கிய காரணமாய் அமைந்தன அந்த இரு இடங்களும். ஜெர்மனி இரண்டுபட்டதில், பெர்லின் பல நாடுகளின் இராணுவ இருப்பிடமாக மாறியதில் மற்றொரு உலகப் போர்தான் மூளவில்லையே தவிர, அதற்கான சூழ்நிலைகள் அனைத்தையும் உண்டாக்கி வைத்திருக்கின்றன அந்த இரண்டு இடங்களும்.

பொருளாதார அடிப்படையில் முற்றிலும் வேறுபட்ட இருவேறு அரசியல் அமைப்பைக் கொண்ட நாடுகள் இரஷ்யாவும் அமெரிக்காவும். தான் வளர்ச்சி அடைய ஆரம்பித்த நாள்முதல் முதலாளித்துவ கொள்கை பொருந்திய அரசியலாக உலக நாடுகளனைத்தும் மாறுவதற்காக எல்லாவித முயற்சியும் எடுத்துவந்திருக்கிறது அமெரிக்கா. அதேபோல் கம்யூனிசக் கொள்கை பொருந்திய அரசியலாக உலக நாடுகள் மாறவேண்டும் என்று இரஷ்யா எல்லாவித முயற்சிகளும் எடுத்துவந்திருக்கிறது. இருநாடுகளின் அடிப்படையில் அமைந்துவிட்ட இந்த முயற்சி வேறுபாடுகள்தான் ஒன்று மற்றொன்றைக் கொள்கை விரோதியாகப் பாவித்து நடப்பதற்கு அடிகோலியது. இரண்டின் முயற்சிகளையும் பலப்படுத்த அதனதன் துணை நாடுகள் பக்கபலமாக நின்றன. எனவேதான் ஜெர்மனி பிரிக்கப்பட்டு ஆளுக்கு ஒன்று என்ற நிலை வந்தவுடன் அமெரிக்காவும் இரஷ்யாவும் இரு ஜெர்மனிகளையும் இருபெரும் சாதன அமைப்பாகக்கொண்டன. ஜெர்மனி இரு சக்திகளின் ஆதிக்க நாடுகள் எனவிருந்தநிலைமாறித்தனிப்பெயர் கொண்ட இரு தனிநாடுகள் என்றிருந்த நிலையை அடைந்தபின்னரும், இரஷ்யாவும் அமெரிக்காவும் அதன் பின்னால் நின்று பின்னணி கொடுப்பதினின்றும் மாறவில்லை. இதன் பலனாக ஜெர்மனி இரண்டு என்ற அமைப்பு நீடித்து நிற்க நேர்ந்தது. ஜெர்மன் பெடரல் ரிப்பப்ளிக் என்று பெயர் சூட்டிக்கொண்டு தனி அரசு பெற்ற நாடாக மேற்கு ஜெர்மனி மாறியபோதிலும், அமெரிக்காவிடம் தான்கொண்ட "அபிமான"த்தைக் கைவிட்டுவிடவில்லை. ஜெர்மன் டெமாக்ரடிக் ரிபப்ளிக் என்ற புதுப்பெயர்சூட்டிக்கொண்டு கிழக்கு ஜெர்மனி தனிநாடாக மாறியபோதிலும் இரஷ்யாவின "ஆதரவை" அறுத்துக்கொள்ள விரும்பவில்லை. நாடு இரண்டுபட்டதில் நாட்டின் மக்கள் இரண்டுபட்டார்கள். நாட்டின் மக்கள் இரண்டுபட்டதால் மக்களின் கொள்கைகளும் இரண்டுபட்டது. கொள்கைகள் இரண்டானதில் வாழ்க்கை முறைகளும் அடிப்படையில் இரண்டானது. ஓரே இனமாக— தேசிய அடிப்படையாக வாழ்ந்த ஜெர்மனியில் இன்று, 'நீ எனக்கு எதிரி' என்று கிழக்கு ஜெர்மானியன் ஒருவன் மேற்கு ஜெர்மானியனை நோக்கிக் கூறுகிறான். மேற்கு ஜெர்மனி அதிபர் கோன்ராட் அடினர் கிழக்கு ஜெர்மனிப் பிரதமர் வால்வர் உல்பிரிட் என்பாரைப் பார்த்து, அணு ஆயுதத் தளவாடங்களைக் கொண்டு எனது நாட்டை அழிக்கவா பார்க்கிறாய் என்று கூறுகிறார். மேற்கு ஜெர்மனி, முதலாளித்துவமே எனது பொருளாதாரக் கொள்கை என்கிறது. சோஷலிசமே வெற்றிக்கு வழி என்கிறது கிழக்கு ஜெர்மனி. இரண்டும் ஒன்றினின்றும் பிரிந்து வந்த

(13-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

V. Soundararajulu

24—4—60.

தம்பி !

"மகாராஜா! எனக்குத் தாங்கள் அடிக்கடி புத்திமதி சொல்லிவருவீர்களே, பொறுமைவேண்டும், ஆத்திரம் கூடாது என்றெல்லாம், அந்தக் கவனம் வராமலிருந்திருந்தால், எனக்கு வந்த கோபத்தில், நான் என்னென்னவோ செய்துவிட்டிருப்பேன். பல்லைக் கடித்துக்கொண்டிருந்து விட்டேன்."

"பதறாமல் சொல்லு, யார் என்ன செய்தார்கள்? உனக்கு ஆத்திரம் வருகிறபடி எவன் என்ன பேசினான்?"

"என்னை ஆயிரம் ஏசட்டும் மகாராஜா! பொறுத்துக் கொள்கிறேன். விளைவு என்ன ஆகும் என்பதுபற்றி யோசிக்காமல் புத்தி கெட்டு, என்னைத் தாக்கினால்கூட, சகித்துக்கொள்வேன். ஆனால், என் எதிரே, என் காதுபட, நான் ஒருவன் இருக்கிறேன், உங்கள் உப்பைத்தின்று வளர்ந்தவன், உங்கள் பொருட்டு, உயிரையும் தரக் காத்துக் கிடப்பவன், உங்களுக்காக எந்த எதிர்ப்பையும் தாங்கிக் கொள்ள, தடுத்து ஒழிக்க ஆற்றல் பெற்றவன், என்பதை எண்ணிப் பார்க்காமல், ஏசினால்... மகாராஜா! எப்படித் தாங்கிக்கொள்வேன்..."

"ஏசினானா? யார் அந்த அற்பன்?"

"அப்படிக் கேட்கத்தான், கொதித்து எழுந்தேன்! அற்பனே! அரசனைக் குறை கூற உனக்கு ஏதடா அருகதை? குறைகூறும் உன் நாவைத் துண்டித்தெடுத்து; நரிக்கு விருந்திடுவேன். மாற்றானை ஓட்டிய மாவீரன், மண்டலத்தை அடிமைப் பிடியிலிருந்து மீட்டிட்ட தீரன், களம்பல கண்டு, வெற்றிபல பெற்று, நமது மக்களின் மானம் பறிபோகாதிருக்க வழி அமைத்த மன்னனை, மடையனே! மனம்போன போக்கிலே ஏச, எப்படியடா, மனம் துணிந்தது! இந்தக் கேவலச் செயலைவிட, எதிரியிடம் கூடிக் குலவிடலாமே! எந்த அரசு முறை பிடிக்கவில்லை என்று ஆயாசப்படுவதாகப் பாசாங்கு காட்டுகிறாயோ, அங்கு உனக்கென்ன வேலை! அந்த இடம், ஏன் உனக்கு. ஓடு, நாட்டைவிட்டு! உதவாக்கரைகளைக்கூட, ஒரு காலத்தில், திருத்திவிடலாம்—பயன்படுத்திக் கொள்ளலாம்—உள்ளத்தில் இத்துணை வஞ்சகத்தைக் கொண்டுள்ள, உன்போன்ற துரோகிகளை விட்டுவைக்கக்கூடாது.—என்றெல்லாம், பொறிபறக்கப் பேசத்தான் துடித்தேன், ஆனால் என் செய்வது, தங்கள் ஆணைபற்றிய நினைவு வந்தது, அடங்கிப்போய்க்கிடந்தேன். காவலன் இட்ட கட்டளை, நினைவிற்கு வந்தது; கட்டுண்டு கிடந்தேன். வேதனையுடன் வெட்கம்! என் செய்வேன்..."

"ஏசினவன்...?"

"எல்லையப்பன்."

"ஆட்டம்பாம்" ஆண்டியப்பன்

"தொல்லையப்பன் என்று சொல்! உம்! எல்லையப்பன் எப்போதும் ஏதேனும், உளறிக் கொட்டிக்கொண்டிருப்பதை வாடிக்கை ஆக்கிக்கொண்டான். கிடக்கட்டும், நமது ஆட்சியிலே, குறை காண்பதையே, அவனோர் கலையாக்கிக் கொண்டான். பிழைப்பும் அதுவாகிவிட்டது. சரி—சரி—என்ன கூறினான்—குறை யாது என்கிருன்."

"ஆட்சி சரியாக இல்லையாம்..."

"கோணலாட்சி! கொடுங்கோலாட்சி! வேறொருவன் ஆட்சி நடத்துவதைக் கண்டாலே, சிலதுகளுக்கு இப்படித்தான், காரணமற்ற சீற்றம், அர்த்தமற்ற ஆத்திரம், தேவையற்ற மனக்குமுறல்..."

"வெள்ளாற்று நீர், மகாராஜா! கரைபுரண்டு, முன்பு, என் கிராமத்தைக்கூடத்தான் அழித்துவிட்டது. விளைநிலம் பாழ்வெளியாகிவிட்டது. வீடுகள் கூட மண்மேடுகளாயின. கால்நடைகள் நூற்றுக் கணக்கிலே மடிந்தன. கஷ்டம் நஷ்டம், எனக்குமட்டுமல்ல, எண்ணற்றவர்களுக்கு. வெள்ளம் வர நேரிட்டால், விபரீதம் விளையும் என்று, முன்கூட்டியே எடுத்துரைத்தும், கரையைச் சரியானபடி அமைக்கவில்லையே, அதனாலன்றோ இவ்வளவு அழிவு ஏற்பட்டது என்று எண்ணினோர் பலர்—நான் உட்பட, எடுத்துக்கூறியதுகூட நினைவிலிருக்கும்."

"ஆமாம்........."

"எவருக்கும் விபத்து நேரிட்டால், வருத்தம், ஆத்திரம் ஏற்படத்தானே செய்யும். எனக்கே, ஏற்பட்டதே! நானே தங்களிடம், பதறி ஓடிவந்து, முறையிட்டேன். அந்தச் சம்பவத்தையும், அது போன்ற வேறு பலவற்றையும், எடுத்துவைத்துக் கொண்டு, பயல், புட்டுப் புட்டுக் காட்டுகிருன், விவர விவரமாகப் பேசுகிருன், கலகமூட்டுகிருன், தூண்டிவிடுகிருன், துடுக்குத்தனமாகப் பேசுகிருன், துளியும் பயமின்றி ஏசுகிருன். "ஆற்று வெள்ளத்தால் ஏற்பட்ட அவதியைக் காட்டி, ஆட்சிக்கு எதிர்ப்பை மூட்டுகிருன்."

"ஆற்று வெள்ளத்தால், அவதி ஏற்பட்டுவிட்டது. அதை யார் மறுக்கிருர்கள். எங்களுக்குத் தெரியாதா! நாங்கள் முறையிடவில்லையா! ஆனல் அதற்கு, ஒரு வரைமுறை வேண்டாமா? மக்கள் மனையிழந்து, மாடிழந்து, தொழில் அழிந்து, துயரத்தில் விழும்போது, துடிதுடிப்பர், பதை பதைப்பர். இது இயல்பு. இதைக் கண்டறிய, கடுந்தவமியற்றவா வேண்டும்; கடுகளவு அறிவுபோதும். இதனை நாங்கள், தங்களிடம் எடுத்துக் கூருமலா இருந்தோம். ஆனல், எல்லையப்பன், இதைக் காரணமாக்கிக் கொண்டு கொடிய பகையை அல்லவா, கக்கித் திரிகிருன். அறநெறி பரப்ப அமைக்கப்பட்டுள்ள கோட்டங்களில், அறம் மட்டுமல்ல, அரிவையரின் கற்பும் அழிந்துபடுகிறது, என்பதை, நாங்கள் கூறிடவில்லையா, முன்பு! மக்கள் அதுகுறித்து, மனம் கொதித்துக் கிடக்கிருர்கள் என்பதனை எடுத்துக் கூருமலா இருந்தோம். தங்கள், மனதுக்குச் சிறிது வேதனை ஏற்படும் என்று அறிந்தும், உண்மை நிலைமையை மறைத்திடலாகாது; ஊரார் உள்ளப் போக்கைக் காட்டியே ஆகவேண்டும், என்ற கடமை உணர்ச்சியுடன், கூட்டாமல் குறைக்காமல், மறைக்காமல், திரிக்காமல், எடுத்துரைத்தோம். அதே விஷயத்தை, எல்லையப்பன், கேட்போர், மிருக உணர்ச்சி பெறக்கூடிய முறையில், பேசுகிருன். மரக்கட்டைகளா! நீவிர்!—மான உணர்ச்சி அடியோடு மடிந்தே போய்விட்டதா! மதப் போர்வையிலே, மதோன்மத்தன் உலவுகிருன், அவனே அரண்மனையில்உள்ள ஒரு ஆள் விழுங்கி ஆதரிக்கிருன், ஏன் என்று கேட்கத் துணிவு இல்லையா! கேட்டால், என்னபோய்விடும்! தலை உருளும் கீழே என்ற பயமா! கோழைகளே! உங்களுக்குக் கொடி ஒரு கேடா! அஞ்சி அஞ்சிச் செத்திடும் அறிவிலிகளாகக் கிடப்பதைவிட, ஆமையாய், ஊமையாய்ப் பிறந்திடலாமே—அடவிசென்று, புலி அடித்துப்போட்ட மிருகத்தின் இறைச்சித் துண்டைப் பொறுக்கித் தின்று வயிறு நிரப்பிக்கொள்ளும் நரியாகி நத்திப் பிழைக்கலாமே!—என்றெல்லாம், பேசுகிருன். கேட்போர், வெட்கத்தால் தலைகுனிகிருர்கள், ஒரு கணம்; மறுகணமோ, கோபம் அவர்களைப் பிடித்தாட்டுகிறது. அரண்மனை இருக்கும் திக்கு நோக்கி நடக்கிருர்கள்—தீப்பொறி உமிழும் கண்களுடன்"

"அவ்வளவுக்குத் துணிந்துவிட்டனரா, அடங்கிக் கிடந்ததுகள்! குதிரைப் படை, சும்மாவிடும் என்ரு எண்ணுகிருர்கள்?"

"தெரியாமற் போகுமா, அவர்களுக்கு. மூன்ருண்டுகளுக்கு முன்பு, குதிரைப்படை வீரர்கள், தாக்கியதால், இறந்துபட்டவர் எண்ணிக்கை இருபது அல்லவோ! அதிலே, பத்துப்பேர், கர்ப்பவதிகளாயிற்றே; மகாராஜா! என் மைத்துனியும், மாண்டாள். தங்கள் முன், என் மனைவிகூட மாரடித்து அழுது நின்ருளே, குனிந்த தலை நிமிராமல், புரண்ட கண்ணீரைத் துடைக்கவும் முடியாமல், நான் கொலு மண்டபத்திலே நின்றுகொண்டிருந்தேனே. குழந்தைகள்கூட, மிதிபட்டுச் செத்தன, என்பதைச் சொன்னேன். குதிரைப் படையினர், கொடுமை செய்கிருர்கள், ஊரே அமளிக் கோலத்தில் இருக்கிறது, என்றும் கூறினேன்........."

"உண்மைதான். அழுதுகொண்டே பேசினுய். நினைவிருக்கிறது."

"அந்த நிகழ்ச்சியை, மகாராஜா! இந்த எல்லையப்பன், கேட்போர் கண்களில் நீர் கொப்பளித்து, குபுகுபுவென வெளிவரத்தக்க முறையில், எடுத்துப் பேசுகிருன். பெற்றெடுத்தீர் பேசும் பொற்சித்திரங்களை! போட்டு மிதித்துக் கூழாக்கின, கொற்றவன் அமைத்துள்ள குதிரைப்படை! என்று அவன் பேசுகிருன், மக்கள், வழியே வருகிற குதிரைப்படை வீரர் மீது பாய்ந்து, அடித்துக் கொன்றுவிடுவார்கள் போலிருக்கிறது, அவ்வளவு ஆத்திரமடைகிருர்கள்."

"எதற்கும் துணிந்துவிட்டார்கள், போலும்! என்னுடைய புதிய வரியைக்கூட, சரிவரக் கட்ட மறுக்கிருர்கள்—கேள்விப்பட்டேன்"

"நானும், முன்பே சொல்லியிருக்கிறேனே, மகாராஜா! வரி, இந்தச் சமயத்தில், இந்த முறையில், விதிப்பது, சரியாகாது, என்று. நான் சொன்னதை அந்த நாசகாலன், எப்படிச் சொல்லுகிருன் என்கிறீர்கள்! வரிகட்டப் பணமில்லாவிட்டால், என்ன, அரண்மனைக்குள்ளே குவிந்து கிடக்கிறது, பொன்னும் மணியும்; புகுந்து எடுத்து வாருங்கள்—வரி கட்டியதுபோக மிச்சம் இருப்பதை வைத்துக்

கொண்டு, மருந்தில்லாததால், மடியும் நிலையில் உள்ள மனையாட்டிக்குத் தாருங்கள்; பட்டுச் சட்டை கேட்டு, குட்டுப்பட்டுக் கதறிய பாலகனுக்குக் கொடுங்கள்; ஒரு பத்து நாளைக்காவது, வயிறாரச் சாப்பிடுங்கள்—பிறகு அரண்மனையில் கொள்ளை அடித்த குற்றத்துக்காகத் தூக்குத்தண்டனை தருவார்கள், நிம்மதியாகச் செத்துவிடுங்கள் — என்று பேசுகிறான். மருந்து கிடைக்கத்தான் இல்லை,. போதுமான அளவு. விலையும் ஏறியபடி இருக்கிறது. வாங்கும் சக்தி தேய்ந்துதான் போய்விட்டது. பொன்னே! மணியே! முத்தே! என்று செல்லமாகப் பெயரிட்டு அழைத்துக்கொள்ளத்தான் மக்களால் முடிகிறதேயன்றி, பொன்னையும் மணியையும் முத்தையும், கண்ணால் காணவும் முடியத்தான் இல்லை. அனைவருக்கும் இது தெரியும்! அடிக்கடி நானே, தங்களிடம் இதைச் சொல்லியுமிருக்கிறேன். இதை, எல்லையப்பன், பகைமூட்டப் பயன்படுத்துகிறான், இப்படிப் பேசாதே, எல்லையப்பா! ஆட்சியைக் குறைகூறாதே, ஆத்திரத்தை மூட்டாதே! என்று அறிவுரை கூறினால், கைகொட்டிச்சிரிக்கிறான்! நாங்கள், நாவிழந்தவர்களாம்! நத்திப்பிழைக்கும்கூட்டமாம்! குறையைக் கண்டும் வெளியே கூறிடப் பயப்படும் கோழைகளாம். கோணலாட்சிக்குக் கொடி தூக்கிக் கும்பி கழுவிடும் குணக்கேடர்களாம்!......"

"அப்படியா சொன்னான் அயோக்கியன்......யார் அங்கே...வரச்சொல் பாதுகாப்புப் படைத்தளபதியை உடனே."

"மனம் குளிருகிறது, மகாராஜா! என்ன பேசினாலும், எப்படி ஏசினாலும், மன்னன், நம்மை ஏதும் செய்யமாட்டார் என்று மனப்பால் குடிக்கும் அந்த எல்லையப்பனை, பிடித்திழுத்துவந்து, விசாரித்து, சிறையில் தள்ளிச் சித்திரவதை செய்தால்தான், என் மனம் நிம்மதி பெறும்."

"சித்திரவதைதான் செய்யவேண்டும். சிரத்தை ஒரே வெட்டிலே கீழே வீழ்த்தினால், பயன் இல்லை. தொடர்ந்து இருக்கவேண்டும், தண்டனை. ஆறுநாட்கள், யானைக்காலில் மிதிபடவிட்டு வைக்கவேண்டும்!"

"ஆறு நாட்களா......!!"

"ஆமாம். ஆற்று வெள்ளத்தால் அழிவு ஏற்பட்டது என்று பேசி, ஏசிய குற்றத்துக்காக. பத்துநாள், பாம்புகளை விட்டுக் கடிக்கச் செய்யவேண்டும், உயிர் உடனே போய்விடாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டும்......"

"பத்துநாட்களா......"

"பத்து நாட்கள்! குதிரைப்படை கொடுமை செய்தது என்று பேசிய குற்றத்துக்காக......பிறகு, எட்டு நாட்கள், எரிகிற நெருப்புக் குழிக்கு மேலே, கட்டித் தலைகீழாகத் தொங்கவிடவேண்டும்—வரி எதிர்ப்புப் பேச்சுக்காக......"

"இதோ, தளபதியார்! குறித்துக்கொண்டார், தாங்கள் கூறியவற்றை, எல்லையப்பன் இப்போது சந்தைச் சதுக்கத்தில்தான் இருப்பான், ஏதாவது சத்தமிட்டுக்கொண்டு—இழுத்துவரச் சொல்லுங்கள்"

"இழுத்துச் செல்லும் தளபதியாரே! பிடரியில் அறைந்து, இழுத்துச்சென்று, இருட்டறையில் போட்டுப்பூட்டும்...உம்! எல்லையப்பனை அல்ல, இந்த இச்சகம் பேசித் திரியும் பிச்சுமணியை."

"மகாராஜா! மகாராஜா!......என்னையா......என்னையா......"

"வேறுயாரை? அடே, அறிவிலி! இதைக்கேள். எல்லையப்பன், என் ஆட்சி முறைக்கு மாறாக வேறோர் ஆட்சிமுறை ஏற்படுத்தவேண்டும் என்பதை வெளிப்படையாகக் கூறிக்கொண்டு, அந்தக்கருத்துக்குச்செல்வாக்குத் தேடிக்கொண்டு வருபவன். குற்றம் குறைகளைக் கண்டிப்பதைத் தன் கடமையாகக்கொண்டுவிட்டான். இளித்துக்கிடந்தால் இன்பவாழ்வு கிடைக்குமே, அடங்கிக்கிடந்தால் பட்டம் பதவி பெறலாமே என்ற பிச்சைப்புத்தி இல்லாதவன். என்னை அண்டிப் பிழைப்பவன், நீ! உன்னை ஆளாக்கிவிட்டவன், நான்! என் ஏவலைச் செய்வதற்காகக் கூலிகேட்டுப் பெறுபவன் நீ! கொடுத்த கூலிக்குத் தக்கபடி, வேலைசெய்கிறாயா என்று கணக்குப்பார்க்கவேண்டியவன் நான்! தலையாட்டிக் கிடக்கிறாய், தர்பாரில்! மாளிகை கிடைத்தது அதனாலே!! அப்படிப்பட்ட நீ, எல்லையப்பன் என் ஆட்சியில் உள்ள குறைகளைக் காட்டிப்பேசினான் என்று எடுத்துக்காட்டும் பாவனையில், ஆட்சியைக் கண்டித்துப் பேசினாய்! ஆற்றுவெள்ளத்தால் ஏற்பட்ட அவதியைக் கூறி, நான் அல்லலைப் போக்காமலிருந்துவிட்டேன், என்று குத்திக்காட்டினாய், அல்லவா! குதிரைப்படையை ஏவி, நான் மக்களைக் கொன்று குவித்தேன், என்று எல்லையப்பன் பேசினான் என்று அவனைக் கண்டித்தாய்—ஆனால் அதே பேச்சோடு பேச்சாக, குதிரைப்படையினர் நடத்திய கொடுமைக்கு நானே காரணம் என்று இடித்துரைத்தாய். வரிச்சுமையை மக்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்று, என் எதிரிலேயே பேசுகிறாய்—எல்லையப்பனைக் காட்டிக்கொண்டே! நானென்ன, அறிவற்றவனோ! எல்லையப்பன் கூறிய, குற்றங்கள் அத்தனையையும், நீயும் கூறுகிறாய். அவன் எங்கோ பேசினான்! உனக்குஉள்ள நெஞ்சழுத்தம், என் எதிரிலேயே, பேசுகிறாய்!! ஏடா! மூடா! எல்லையப்பனை நீ ஏசிப்பேசிவிட்டதாலேயே உன்னை நான், ஓர் யோக்யன், என்று கணக்கிட்டுக்கொண்டேன், என்று கணக்கிட்டுக்கொண்டாய். என் ஆட்சி முறையிலே இன்னின்ன குற்றங்கள் உள்ளன என்று, அவன் எடுத்துக்காட்டிப் பேசுகிறான் — அச்சம் தயை தாட்சணியத்துக்குக் கட்டுப்படாமல்!! நீ? அரசே! உமது ஆட்சியிலே, குறைஏது! என்று பேசினாய்? இல்லையே! நீயும் அவன், என்னென்ன குற்றம் குறைகளைக்கூறினானோ, அவைகளை என் எதிரிலேயே எடுத்துக்காட்டினாய். உன் போக்கு, எனக்குப் புரியாது என்று, எண்ணிக்கொண்டாய். தளபதியாரே! நமது கொலுமண்டபத்தில், நமது பரிவாரத்தில் ஒருவனாக இடம் பெற்று அமர்ந்துகொண்டு நமது ஆட்சியைக் குறைகூறிய இந்தக் கெடுமதியாளனை, இழுத்துக்கொண்டுபோய், அடைத்திடுங்கள் சிறையில், இருட்டறையில்..."

"ஐயயோ...வேண்டாம், வேண்டாம்......தப்பு! தப்பு!"

* * *

கூச்சல் கேட்டு, அலறி எழுந்து உட்கார்ந்தேன். அருகே, படுத்து உறங்கிக்கொண்டிருந்த, ஆண்டியப்பன், ஏதோ, கனவுகண்டு உளறிக்கொண்டிருக்கிறான்,

என்று தெரிந்தது. தட்டி எழுப்பி, "ஆண்டி! என்ன இது? ஏன் இப்படிக் குளறிக்கொண்டிருந்தாயே..." என்று கேட்டேன். ஒரு விநாடி மிரண்டபடி, இங்கு மங்கும் பார்த்தான். மறுவிநாடி, அடக்கமுடியாத நிலையில், ஓவெனச் சிரித்தான். என்ன? என்ன? என்று நான் கேட்டதற்கு, ஆண்டியப்பன் "ஒன்று மில்லை—ஒரு வேடிக்கையான, கனவு கண்டேன்" என்றான். "கனவில்......?" என்று நான் கேட்டேன்.

"கனவில், நான் ஓர் தளபதி! அரச சபையில்! என்னை அரசனுடைய உத்தரவுப்படி, சிறையில் தள்ள, இழுத்தார்கள். விழித்துக்கொண்டேன்" என்றான் ஆண்டியப்பன்.

முழுவதும் கூறும்படி கேட்டேன். எளிதில் இசைவு தரவில்லை. மெத்த வற்புறுத்திய பிறகு, கனவிற் கண்டதை விவரமாகக் கூறினான். அதைத் தான் தம்பி! நான், முறைப்படுத்தி, துவக்கத்திலே, தந்திருக்கிறேன்.

"அரசன், எப்படி இருந்தான்?" என்று நான் விளக்கம் கேட்டேன்.

"போடா, போ! இதை வைத்துக்கொண்டு, கேலி செய்யப்போகிறாய்; தெரியுமே, எனக்கு, என்றான்."

நெடுநேரத்துக்குப் பிறகுதான், அரசன், காமராஜர்போல இருந்ததாகக் கூறினான். என்னால் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியவில்லை. ஆண்டியப்பன், அப்படி ஒரு வேடிக்கையான கனவு ஏன் கண்டான், என்பதற்கான காரணமும், எனக்கு விளங்கலாயிற்று.

தம்பி! ஆண்டியப்பன், என் நண்பன். இருந்தும், காங்கிரசில் இருப்பவன். அங்கு இருப்பவர்களெல்லாம், நமக்குப் பகைவர்களா, என்ன! நம்மோடு இருக்கவேண்டியவர்கள், நம்முடன் இருந்தவர்கள், நமது அழைப்பை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் எனும் வகையினரன்றோ, இன்றையக் காங்கிரசில், ஒலிக்கும் மணிகளாகி உள்ளனர். அந்த வகையினரில், ஆண்டியப்பன்! பேச்சாளனுங் கூட! பேச்சிலென்ன இருக்கிறது, செயல்வேண்டும்; அனைவரும் செயல் வீரராகவேண்டும், என்று, பேசும், பேச்சாளன்.

"அட, பார்க்கலாம், பேசலாம் என்று எண்ணிக் கொண்டு வந்தால், நீ, கிடைத்தால்தானே. நாள் தவறாமலா, கூட்டம்! செச்சேச்சே! உனக்கும்தான் சலிப்பாக இல்லையா!! என்ன இருக்கிறது, அப்படிப் பேச, ஒவ்வொருநாளும்!" என்று என்னிடம், கனிவுடனும் உரிமையுடனும் பேசும் போக்கினன், ஆண்டியப்பன். காங்கிரஸ் வட்டாரத்தில், ஆட்டம் பாம் ஆண்டியப்பன் என்று, சிலநாள், விளம்பரம் செய்துகூட வந்தார்கள்! இரண்டோர் மாதம்.

நள்ளிரவு, நான் மழையூர் சென்றபோது, சிறு தூறல் விழத் தொடங்கிற்று. ஆனால் பத்தாயிரம் இருக்கும் கூட்டத்திலிருந்தோர்—நான் என்ன செய்வது? ஒருமணி நேரத்துக்குமேல் பேசினேன். அடுத்த கூட்டம், தவனியில்! மோடார் கொண்டு வந்தவர், முடியாது என்று கூறிவிட்டதால், வந்தவாசி திரும்பினேன்; தவனி கூட்டம் நடைபெற வில்லை. மறுநாள், ஆண்டியப்பன், வந்திருந்தான்.

"ஆமாம், இந்த இடங்களெல்லாம் போகிறாயே, உழுந்தை, மழையூர், காட்டுநல்லூர், பொன்னூர், ஊத்துக்காடு, என்றெல்லாம். இங்கே உள்ளவர்களிடம், என்ன பேசுகிறாய்?" என்று வியப்புடன் கேட்டான். இரண்டு ஆண்டுகட்கு முன்பு, இதே ஆண்டியப்பன் கேட்டிருக்கிறான், "என்ன உங்கள் கழகம், திருப்பித் திருப்பி, திருச்சி மதுரை, தஞ்சாவூர் வேலூர், சேலம் சென்னை, இவ்வளவுதானே. கிராமப்பக்கம், யார் உங்களை அழைக்கிறார்கள்!! என்று கேலி பேசி இருக்கிறான். இப்போது தம்பி! நமது கழகக் கூட்டங்கள், பெரும் அளவு கிராமங்களிலே நடைபெறுவது கண்டு, அதே ஆண்டியப்பன், "அந்தக் கிராமங்களில் என்ன வேலை?" என்று கேட்கிறான். கேலிக்காக அல்ல! சிறிதளவு கிலியுடன்!! சிற்றூர்களிலே, நமது கழகம் செல்வாக்குப் பெற்றுக்கொண்டு வருவதைக் கள்ளங் கபடமற்ற கட்டிளங்காளைகள், கல்லூரி சென்றும் பெறமுடியாத நல்லறிவைக் காலமெனும் ஆசானிடம் கற்றுத் தெளிந்த பெரியவர்கள், ஊரைப் பார்த்து, அரசியல் பிரச்சினையைப் புரிந்துகொண்டுள்ள தாய்மார்கள், நமது கழகக் கருத்துகளை, சுவை தருவன என்று முதலில் கவனிக்கத்தொடங்கி, பிறகு, பயனுள்ளவை என்பதை அறிந்து சுவைப்பதை, ஆண்டியப்பன் மட்டுமா, பொதுவாகவே காங்கிரசில் பலரும், உணரவில்லை. அது நமக்கு நல்லதுதானே!

ஆண்டியப்பனிடம் பிறகு, அரசியல் உரையாடல். சட்டசபை நிகழ்ச்சிகள் பற்றிய பேச்சுகள்: காங்கிரஸ் ஆட்சியிலே, ஏற்பட்டுப்போயுள்ள ஊழல்கள்பற்றிய விளக்கங்கள்—மறுப்புரைகள்—அவற்றினுக்கு எதிர்ப்புரைகள், இப்படி.

அதைத் தொடர்ந்து நான், காங்கிரஸ் ஆட்சியின் போக்கிலே, காங்கிரசாரே கசப்படைந்து, சில வேளைகளிலே வெளிப்படையாகவும், மற்ற வேளைகளிலே, இலைமறை காயாகவும். பேசிக்கொண்டுவருவதுபற்றிச் சட்டசபைப் பேச்சுகளையே எடுத்துக்காட்டிக் கூறினேன்.

"நாங்கள் எதிர்க்கட்சி, ஆண்டி! ஆட்சியிலே உள்ள முறையே மாறவேண்டும் — மாற்றப்படவேண்டும் என்ற கருத்துடையவர்கள். உங்கள் தலைவர்களின் ஆட்சியிலே காணக்கிடக்கும் கேடுபாடுகளை எடுத்துரைக்கிறோம். இதற்காக எங்கள் மீது பாய்கிறார்கள். அதைக்கேட்டு ஆட்சியை நடாத்திச் செல்லும் நாயகர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால் அதே வாமால், ஆட்சியிலே உள்ள குறைபாடுகளையும், எடுத்துப் பேசுகிறார்கள். அப்போது அந்தத் தலைவர்களுக்கு எப்படி இருக்கும், எரிச்சல் ஏமாற்றம்! இவர்களும் குறைகூறுகிறார்கள், அவர்களும் குறை காணுகிறார்கள்! அவர்களாவது, எதிர்க்கட்சி! இவர்கள் நமது கட்சி என்று முத்திரை பொறித்துக் கொண்டு, சலுகைகள், உரிமைகள் பெற்றுக்கொண்டு, நமது ஆட்சியில் குறைகள் உள்ளன என்று, அவர்கள் எதிரிலேயே பேசுகிறார்களே, இது எவ்வளவுகேவலம். இதையுமா, நாம் தாங்கிக்கொள்ளவேண்டும்!—என்று எண்ணாமலிருக்க முடியுமா? இப்படிப்பட்டவர்களை, நம்மவர் என்று நம்பிக் கிடப்பதே ஆபத்து. எந்த நேரத்தில் காலைவாரி விட்டுவிடுவார்களோ என்றல்லவா அச்சப்படவேண்டி இருக்கிறது, என்றுகூடத் தோன்றாதா என்றெல்லாம் கேட்டேன். ஆண்டி

ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டான்—நல்ல உறக்கம் எனக்கு, அவன் தூங்கத் தொடங்கியதும். பாவம், கனவு கண்டிருக்கிறான், நான் சொன்னவற்றைத் தூக்கத்திலே துணைக்குக் கொண்டதால். கனவுதான், என்றாலும், இப்போது நடைபெறும் இதே மக்களாட்சி மன்னனாட்சியாக இருந்துவிடுமானால், காங்கிரஸ் கட்சிக்காரர்களில் பலருக்கு, ஆண்டி கனவில் தோன்றிய, பிச்சுமணி கதிதான்!!

தம்பி! கழகத்தின் அடிப்படைக் குறிக்கோள் திராவிடநாடு பெறுவது. ஆயினும் இடையிலே, காங்கிரஸ் துரைத்தனம், நடத்திவரும் ஆட்சிமுறையின் விளைவுகளை எங்ஙனம், கவனிக்காதிருக்கமுடியும்! குறைகளைச் சுட்டிக்காட்டிக் கண்டிக்கிறோம், திருத்த முற்படுகிறோம், திடலில் மட்டுமல்ல, சட்டமன்றங்களிலும்! அங்கு, நமது கழகத்தவர், காங்கிரஸ் ஆட்சியால், விளைந்துள்ள கேடுபாடுகளை எடுத்துக்கூறும் போது, காங்கிரஸ் உறுப்பினர்களுக்குக் கடுங்கோபம் வருகிறது! சுடுசொல்லால் தாக்கித் தகர்த்திடலாம் என்று தோன்றுகிறது. பலர் பலவிதமாகக் கழகத்தைக் கண்டிக்கிறார்கள். ஆனால் அவர்களே, அந்த வேலை முடிந்ததும்; காங்கிரஸ் ஆட்சியிலே ஏற்பட்டுவிட்ட, கேடுபாடுகளை எடுத்துக்காட்டிப் பேசவேண்டி வந்துவிடுகிறது... நிலைமை அப்படி.

தம்பி! அவர்கள், நமது கழகத்தைக் கண்டித்துப் பேசுவது மட்டுமே, உன் காதுக்கு எட்டியிருக்கும்—ஏனெனில், அதுவரையில் மட்டுமே, உன் கண்களில் படும்படி, தேசியப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன! ஆனால் சட்டசபையில் சில காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசுவதை-முழுவதையும், கேட்க நேரிட்டால், தம்பி! ஆச்சரியம் மேலிடும்.

அமைச்சர்களுக்கு, 150 என்ற எண்ணிக்கை பலம் இருப்பதால், அலாதியான மகிழ்ச்சி இருப்பது இயல்பு. அந்த மகிழ்ச்சி, போதைபோலாகி, துடுக்குத்தனம் என்ற அளவுக்குக்கூடத் துணிவு வளர்ந்துவிடுகிறது. மக்களாட்சி முறைக்கு, இந்தப் போக்கு, ஆகாது; தீது பயப்பதுதான்—ஆனால் இது சுவைத்திடும்போது இனிப்பாக இருப்பதால், பலரும், அதற்கு இரையாகி விடுகிறார்கள்.

நல்ல கருக்கல்! சாவடியில், படுத்திருந்தான் ஒரு குறைமதியுடையான், பாதித் தூக்கத்தில். மடியில் சிறு பணமுடிப்பு. விரலில் ஒரு மோதிரம்! கள்ளர் இருவர் வந்தனர். இருட்டிலே படுத்துக்கிடந்தவன் மீது, அவர்கள் கால்பட்டது. "சனியன்! ஏதோ மரக்கட்டை காலில் பட்டது!!" என்றான் திருடன். படுத்துக்கிடந்தவன், வாய்திறப்பானேன்! குறைமதியாளனல்லவோ? புத்திக்கூர்மையைக் காட்டவேண்டும் போல் தோன்றிற்று. எனவே, படுத்திருந்தபடியே, "உங்கள் வீட்டு மரக்கட்டை, மடியிலே பணமும், விரலிலே மோதிரமும் வைத்திருக்குமோ!" என்று கேட்டான். நமக்குத் தெரியாமலே போய்விட்டதே, இந்தவிஷயம், என்றுகூறிப்படுத்திருந்தவனை எழுப்பிப் பதக்கமா கொடுத்திருப்பார்கள்! இரண்டு அறை கொடுத்தார்கள் — பணத்தைப் பறித்துக்கொண்டு, துரத்தினார்கள்—என்றோர் கதை கூறுவர்.

அமைச்சர்கள், இந்தவிதமான தெளிவும் துணிவும் நிரம்பப் பெற்றவர்கள் என்பது, பலமுறை வெளியாகிறது. ஆனால் கதையில், திருடன் வருகிறான் அடித்துப் பறித்துக்கொள்ள. கழகம், பதவியைப் பறித்திட, சட்டமன்றம் செல்லவில்லை. எனவே அமைச்சர்களின் எந்தப் போக்கையும், அரசியல் இலாபத்துக்குப் பயன்படுத்திக்கொள்வதில்லை. படுத்துக் கிடந்த குறைமதியாளனுக்கு, மடியிலிருந்த பணமும், விரலில் அணிந்திருந்த மோதிரமும், நினைவிலே கொட்டிக்கொண்டே இருந்ததைப்போல, அமைச்சர்களுக்கு, 150 என்ற எண்ணிக்கையின் நினைவு எப்போதும், குடைந்தவண்ணம் இருக்கிறது. அந்த 150-ல் என்னென்ன விதமான போக்கினர், மனதினர், உளர் என்பதை அறிந்துகொள்ள வாய்ப்புகள் பல ஏற்படுகின்றன; தெளிவு ஏற்பட்டதாக மட்டும் இன்னும் தெரியவில்லை. அந்த 150-ல், சிலர் கழகத்தின் மீது கணை வீசும்போது அமைச்சர்களுக்கு உச்சி குளிர்ந்துவிடுகிறது; ஆனால் அதேபோது, அவர்கள் காங்கிரஸ் ஆட்சிக்குக் கசையடி கொடுக்கிறார்கள்—உறைக்கிறதோ இல்லையோ, நானறியேன், ஆனால் ஆண்டியப்பன் அதையெல்லாம் நான் சொல்லக் கேட்டதால்தான்; கனவு கண்டு கலக்கமுற்றான்.

இந்த ராஜ்யத்தினுடைய ஜனத்தொகையில் 80 சதவிகிதம் கிராமங்களில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? இன்றைய தினம், மருத்துவ சுகாதார வசதி, பெரும் பகுதி நகரங்களில்தான் செய்யப்படுகிறது. இன்று கிராமங்களில் உள்ள மருத்துவ, சுகாதார முறைகளைப் பார்த்தால், எந்தவித மருத்துவ உதவிகளும் அவசர உதவிகளும் அற்ற நிலையில் இருக்கிறதென்பதை அமைச்சர் அவர்கள் நன்கு மனதில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*

கிராமப் பகுதிகளில் இருந்து வருகிறவர்களுக்கு வைத்திய வசதி அளிக்க ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அங்கு எவ்வித வசதியும் கிடையாது.

*

வைத்தியத் துறையில் இலஞ்சம் என்ற நிலைமை இருக்குமானால், அது மக்களை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை நீங்கள் கவனித்துப் பார்க்கவேண்டும்.

*

இன்னும் பல கிராமப் பகுதிகளில் டாக்டர்கள் இல்லை டாக்டர்கள் இல்லை என்று, அந்தப் பகுதிகளைக் கவனிக்காமல் அப்படியே விட்டுவிடக்கூடாது.

*

தம்பி! நல்லாட்சிக்கு அடையாளமா இவை? கிராமத்தைக் கவனிக்காத ஆட்சி! மருத்துவமனைகள் இல்லாத கிராமங்கள். டாக்டர்கள் இல்லாத மருத்துவமனைகள்! மருந்து களவுபோகும் இடங்கள்! வைத்தியத்துறையில் இலஞ்சம்!—இவை இந்தக் காங்கிரஸ் ஆட்சியிலே காணக்கிடப்பவை.

சட்டமன்றத்திலே, இவைகளைச் சுட்டிக்காட்டிப் பேசும்போது, அமைச்சர்களின் காதுக்குக் குளிர்ச்சியாகவா இருக்கும்? எண்பதுகோடி ரூபாயல்லவோ, தம்பி! துரைத்தனம், இந்த ஆண்டுக்குப்பெறுகிறது;

பணமில்லா நிலையல்லவே! அவ்விதமான ஆட்சியிலே கிராமங்கள் ஏனிப்பற்றுக் கிடப்பானேன்? என்ன செய்கிறார்கள் இந்த அமைச்சர்கள்? எங்கே போகிறது பணம்? இந்த நிலையில், கிராமங்களை வைத்து விட்டு, ஆதரவு கேட்பது அக்ரமம் அல்லவா?

சட்டமன்றத்திலே, இது, எடுத்துக்காட்டப்படும் போது அமைச்சர்களுக்கு ஆத்திரம் எழுவது இயல்பு—அவ்விதம் பேசுவோர், நமது கழகத்தவராக இருந்தால்.

ஆனால், தம்பி! நான் குறிப்பிட்டிருப்பது, திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த உறுப்பினர், வி. சுப்பையா என்பவரின் பேச்சு—1959-ம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் இருபத்து ஆறும் நாள்!!

ஆண்டியப்பன், என்ன பதில் அளிக்க முடிகிறது

ஆண்டி கிடக்கட்டும்--வெறும் பேச்சாளன்—அறிவாளர்களாம் அமைச்சர்கள் என்ன பதில் கூறுவர் பாபம்!

எங்கள் பிர்க்காவில் இருக்கின்ற வீரபாண்டி, வேம்படிதாளம், வெண்ணந்தூர் போன்ற பத்துக் கிராமங்கள் இருக்கின்றன. அவைகள் ஒன்றிலும் ஒரு டிஸ்பென்சரி (மருத்துவமனை) கூடக் கிடையாது.

•

பல கிராமங்களில் அரிஜனங்கள் குடிதண்ணீர்க் கிணறுகள் இல்லாமல் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். பல கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் இது நன்றாகத் தெரியவரும்.

• • •

......அனுபவம் இல்லாத அதிகாரிகள் இருப்பதால் பல வேலைகள் நடைபெறாமல் தடைப்படுகின்றன. அவர்களுக்கு அனுபவம் இல்லாத காரணத்தால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. அந்த இலாகாவின் அதிகாரிகளிடத்தில் பலகுறைபாடுகள் இருக்கின்றன.

• • •

தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருப்பது, காங்கிரஸ் ஆட்சி—எனினும், நிலைமை, மேலே கூறப்பட்டதுபோல! பெருமைப்படுவதற்கான நிலைமையா?

தம்பி! இவ்விதம் பேசியவர், நமது கழகத்தவர் என்றால், இவர்கள் யார் தெரியுமா? பூர்வோத்திரம் என்ன தெரியுமா? இவர்கள் வெள்ளைக்காரனுக்கு வால்பிடித்தவர்கள்!—என்றெல்லாம், நிதி அமைச்சர் வெளுத்துவாங்குவார்! சமர்த்தர். ஆனால் இவ்விதம் பேசியவர் காங்கிரஸ்காரர்! காங்கிரஸ்காரர் என்பதோடு கழகத்தைக் கண்டித்துப்பேசுவது தேசத்தொண்டு என்று எண்ணிடும் போக்கினரில் ஒருவர்—சேலம் மாவட்டம்—கந்தசாமி எனும் பெயருடையார்!

நான் இதனைக் கூறியபோது, ஆண்டியப்பன் எப்படி, திகைத்துப்போய் வாய் அடைத்துக் கிடந்தானோ, அதேதானே, அமைச்சர்கள் நிலையும். இவர்களுமா இப்படி இடித்துப் பேசுவது? என்று எண்ணி வாட்டமடைந்திருப்பார்கள்,

இருக்கும் நிலையை மறைக்கவோ, மறைக்கவோ முடியவில்லை. எனவே, அவர்கள், "நடப்பது காங்கிரஸ் ஆட்சிதான், நாம் காங்கிரஸ் கட்சிதான், இருந்தாலும் உண்மையை எப்படி எடுத்துரைக்காமல் இருப்பது, ஏதும் பேசாதிருந்தால், வாக்குக்கொடுத்த மக்கள், வாட்டி எடுக்கமாட்டார்களா — என்று, எண்ணித்தான் பேசிவிட்டார்கள்!!

என்னுடைய தொகுதியில் வீடுகட்டும் திட்டத்திற்குப் போடப்பட்ட மனைக்கட்டுகளுக்கு ஆயிரக்கணக்கான மனுக்கள் இருக்கின்றன. ஒருமனைக்கட்டுக்கூடப் பரிசீலனைக்குவந்ததில்லை. அந்த மனைக்கட்டு விஷயத்தில் ரொம்பச் சங்கடங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு அரிஜனங்களுக்கும் மனை ஒதுக்கவேண்டுமென்று பிரயத்தனப்பட்டும் அது கூடி வரவில்லை. சங்கடங்கள் நிறையஇருக்கின்றன. அரிஜனங்களுக்காகத்தனி இலாகா, அங்கு ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு கிராம சேவகர் என்று போட்டிருக்கிறீர்கள். ஆனால் அவர்கள் எங்கிருக்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்? என்பது தெரியாது.

•

தம்பி! பரிதாபமாக இருக்கிறதல்லவா! அரிஜனங்களின் நலன்களைக் கவனிக்கவே, தனியாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எமது ஆட்சியின் பெருமையே இதிலேதான் இருக்கிறது, என்று பேசாத மந்திரியில்லை, பேசாதநாளில்லை. அந்த அதிகாரிகளைக் காணவேண்டும், கண்டு அவர்களிடம் கூறினால், அரிஜனங்களுக்கான நலன்களைப் பெற்றளிக்க முடியும், என்று ஒரு சட்டசபை உறுப்பினர் கதராடையார், காங்கிரஸ் கட்சியினர், தேடித் தேடிப் பார்க்கிறார், அவர் கண்களுக்கு ஒருவரும் தட்டுப்படவில்லை. உள்ளம் கொதித்துச், சட்டசபையில் எழுந்து நின்று பேசுகிறார்,

> "அவர்கள் எங்கு இருக்கிறார்கள்.
> என்ன செய்கிறார்கள்?
> என்பது தெரியவில்லை!"

இது ஒன்று போதுமல்லவா, பெருமைப்பட்டுக் கொள்ள!

பாரத புத்ரர்களே! கேளுங்கள், எமது ஆட்சியின் அருமை பெருமையை. அரிஜன மக்களின் நலன்களைக் கவனிக்கவென்றே, தனியாக அதிகாரிகளை நியமித்திருக்கிறோம். அவர்கள் எங்கு இருக்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்? என்பது மட்டும், ஒருவருக்கும் தெரியாது. காங்கிரஸ் எம். எல். ஏ. தேடினாலும், கண்டுபிடிக்க முடியாது அவர்களை. நீவிர், கட்டாயம் பார்க்கவேண்டுமானால், நாங்கள் எங்காவது விழா நடத்த 'விஜயம்' செய்கிறோமே, அப்போது வாருங்கள்; ஜீப்புகள் வந்து நிற்கும், அதிலிருந்து அதிகாரிகள் இறங்குவார்கள்!—என்று, அமைச்சர்கள் பேசிக்கொள்ள முடியும்? ஆண்டியப்பன், தலை குனிந்துகொண்டான். வெட்கம்; துக்கம் அவனுக்கு. அமைச்சர்களும் வெட்கப்படத்தானே வேண்டும், ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ.யே, இவ்விதம் பேசக்கேட்டு. இந்த வேதனையை உண்டாக்கவேண்டுமென்று பேசியவர் ஒரு சமயம், எண்ணாமலிருந்திருக்கலாம். எதிர்க்கட்சி என்ன, நாமேதான் இவை

களைச் சொல்வோமே, தெரியாதா? முடியாதா? என்ற போக்கில் பேசியிருக்கலாம். பேசிய நோக்கம் அறிய, பேசியவர் தெரியவேண்டும், என்கிருய், சரி கேட்டுக்கொள், இவ்விதமாகக் காங்கிரஸ் ஆட்சியின் (அவ) லட்சணத்தை எடுத்துக்கூறியவர் சடையப்ப முதலியார் என்பவர்—சாட்சாத் காங்கிரஸ்காரர்.

குறைகள் இருந்தால் எடுத்துச் சொல்லத் தானே வேண்டும்—இதிலே தவறு என்ன? என்று வாதாட முற்படுவர்—சிலர் இப்போதே வாதாடுகின்றனர்.

மூன்று உண்மைகள். இவர்களை அறைகூவி அழைக்கின்றன. குற்றம் குறைகளைப் பேசுவது தவறல்ல—பேசிக் களைந்து கொள்ளுவதுதான், ஜனநாயக முறை. எவரும் ஒப்புக்கொள்வர். ஆனால், தம்பி!

(1) எங்கள் ஆட்சியின் பெருமையே பெருமை. என்று இவர்கள் பேசிக்கொள்கிருர்களே, அது தவறுதானே? பொய்தானே?

(2) குற்றம் குறைகளைக் கழக உறுப்பினர்கள் எடுத்துக்கூறும்போது, காய்கிருர்களே, மாய்கிருர்களே, தவறுதானே!

(3) குற்றங்குறைகளை இந்தக் காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் தங்கள் கட்சிக் கூட்டத்திலே எடுத்துக்காட்டித்திருத்திக்கொள்ளவழி இருக்கிறதே, ஏன் செய்யவில்லை? அனுமதி இல்லையா? பலன் ஏற்படவில்லையா? எதுவாக இருப்பினும், தவறு அல்லவா? ஏன் அது தொடர்ந்து இருக்கிறது? சொந்தக் கட்சிக்காரர் சுட்டிக் காட்டியும், ஆட்சியாளர், மந்தத்தனம் காட்டுவது ஏன்? நல்லது செய்ய இயலவில்லையா? அல்லது, குறையை எடுத்துக் காட்டுவோரை மதிக்க மறுக்கிருர்களா? இவ்விதமெல்லாம் ஆண்டியப்பனைக் கேட்டதால்தான், அவனுக்கு ஆயாசம் மேலிட்டது—உறக்கம் சரியாக வரவில்லை--கனவு கண்டான், குளறிக் கூவினன்.

நான் இந்த இலாகாவைப்பற்றிக் குறிப்பிடுகின்ற இந்தச் சமயத்தில் ஒரு குறைபாட்டைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சிறியவனுடைய சொல் எவ்வளவு தூரத்திற்கு ஏறும் என்று எனக்குத் தெரியவில்லை. மற்றத் தனிப்பட்ட இலாகாக்கள் இயங்குவதுபோல இந்த டெவலெப்மெண்ட்டு இலாகா இயங்கவில்லை.

* * *

பிளாக் டெவலெப்மெண்ட்டு அதிகாரிகளுடைய நிலை எல்லாம் இன்றைக்குத் தண்ணீரைவிட்டு வெளியே போட்ட மீன மாதிரியும், தாயற்ற குழந்தை போலவும் இருந்துகொண்டிருக்கிறது.

*

சில இடங்களில் பிளாக்டெவலப்மெண்ட் அதிகாரிகளாகத் தகுதியற்றவர்களைப் போடுவதால் பல தவறுகள் நடக்கின்றன.

*

இப்போது அம்பரோஸ் என்று ஒருவரை நியமித்திருப்பதாகத் தெரிகிறது நாங்கள் இது வரையில் அவரைப்பார்த்ததில்லை.

*

மேலும் அதிகாரிகளிடையே பொருமை இருந்துகொண்டிருக்கிறது; இதையும் போக்க வேண்டும். இது தவிரச் சில இடங்களில் அக்கவுண்டுகள் எல்லாம் சரியாக இல்லை என்று சொல்லப்படுகின்றன.

*

இவ்விதம் இருந்தால் நிச்சயமாகப் பொது மக்கள் குறைகள் சொல்லத்தான் செய்வார்கள்

*

சில இடங்களில் கணக்குகள் எல்லாம் குழப்பமாக இருக்கிறது. கடைசியில் அதைப் பற்றி நல்ல முறையில் விசாரணை ஒன்றும் நடப்பது இல்லை.

*

தம்பி! இந்தத் திருவாய்மொழி, காங்கிரஸ் ஆட்சியின் கண்ணின் மணி என்று கொண்டாடப்பட்டு வரும், சமுதாயநலத் திட்டம் பற்றியது, பேசிய பெருமகனே, கழகத்தை ஏசினல், பாரதமாதா, கட்டித் தழுவி, உச்சி மோந்துமுத்தமிட்டு, "பாலகா! உன் அரும் புத்திக்கூர்மை வேறு யாருக்கடா வரும்! வா, மகனே! வா! உன்னை வையகமெங்கும் அழைத்துச் சென்று காட்டவேண்டும்." என்று பூரித்துக் கூறுவார்கள், என்று எண்ணி இறும்பூதெய்துபவரோ, என்று எண்ணத்தக்க வகையில், சமயம் கிடைக்கும்போதெல்லாம், கழகத்தைச் சாடும், நாகர ஜமணியக்காரர் எனும் நற்றொண்டர்! சேலம் மாவட்டம் அவர்,

பொருமை
பொய்க் கணக்கு
பூசல்
திறமைக் குறைவு
அனுபவமின்மை

எனும் அரிய குணங்களை ஆபரணங்களாகப் பூட்டிக்கொண்டு, எமது கட்சி நடாத்தும் ஆட்சியின் செல்லப்

விற்பனையாளர்கள் கவனத்திற்கு

ooo

விற்பனையாளர்கள், தங்களுக்குத் தேவைப்படும் இதழ்களின் எண்ணிக்கை விபரத்தை ஒவ்வொரு கிழமையும் புதன் கிழமைக்குள் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

பொறுப்பாளர்
"திராவிட நாடு"

பிள்ளையாம், சமுதாய நலத் திட்ட இலாகா, இருக்கிறது; கண்டேன், காணீர்; என்கிறார்.

அமைச்சர்கள், என்ன சொல்வார்கள்? ஆண்டியப்பன், என்ன செய்தான்? படுத்தான்—புரண்டான்—குளறினான்! வெட்கம்! துக்கம்!

> அமெரிக்காவிலிருந்து நம் நாட்டிற்குப் பால் பவுடர் அனுப்புகிறார்கள். அது இப்பொழுது டின் ஒன்றுக்கு ஏழு, பத்து ரூபாய் வரை விற்கப்படுகிறது. அந்தப்பால்பவுடர் யார் யாருக்கோ தின்பண்டங்கள் முதலியவை செய்வதற்காகப் போய்விடுகிறதே தவிர, ஏழை மக்களுக்கு அந்தப்பால்பவுடர் கிடைப்பதில்லை. இதுபற்றிக் கலெக்டர் போன்றவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பெட்டிஷன் மூலமாக அமைச்சர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அமெரிக்காவிலிருந்து வரும் பால் பவுடர் ஜனங்களுக்கு, ஏழை மக்களுக்குக் கிடைக்கவேண்டும், அது ப்ளாக் மார்க்கெட்டில் இப்போது போவதைத் தடுக்க வேண்டும்.

எப்படி இருக்கிறது தம்பி! பச்சைத் தமிழரின் ஆட்சி!! பால் பவுடர், பிளாக் மார்க்கெட்டாகிறதாம்! பேசியவர், நமது கழகமல்ல! ஏ! அப்பா! அப்படிப் பேசிவிட்டிருந்தால், எத்தனை மேடைகள் அதிர்ந்திருக்கும்!!

"ஆண்டியப்பா! பெரிய விஷயங்கள்கூடக் கிடக்கட்டும். உங்கள் ஆட்சியிலே மிகக் கேவலமான ஒரு காரியம் நடப்பதாகக் கேள்விப்படுகிறேன், கோபம்கூட அல்ல, வருத்தமாக இருக்கிறது. ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாகத் தரச்சொல்லி தானமாகத் தருகிறானே அமெரிக்க நாட்டான், பால் பவுடர். அதைக்கூடவா கள்ள மார்க்கெட்டில் கொண்டுபோய் விற்பது! இது ஈனத்தனமான செயல் அல்லவா? என்று நான் கேட்டபோது, ஆண்டியப்பன், என்னை அறைந்தே விடுவான் போலிருந்தது—அவ்வளவு ஆத்திரம் வந்தது.

ஆனால்; சட்டசபையில் காங்கிரஸ்கட்சியினர், பெரியசாமி என்பவர் பேசினார், பால் பவுடர் விஷயம்.

இதை எல்லாம் கேட்டுக்கொண்ட பிறகும், அமைச்சர்கள், வெட்கமின்றி எதிர்க்கட்சியைத்தாக்க, கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு வருகிறார்களே, வேடிக்கையாக இல்லையா!! அங்கே ஏனோ, சொரணையற்ற தன்மை!!

ஆண்டியப்பன், வருத்தத்துடன் சொன்னான், "இவர்கள்—எங்கள் கட்சிக்காரர்கள் — ஏன்தான் இப்படி எல்லாம் பேசி மானத்தை வாங்குகிறார்களோ, தெரியவில்லை. இதையெல்லாம், சட்டசபையில்தானா பேச வேண்டும் — அமைச்சர்களிடம் தனியாகச் சொல்லக் கூடாதா?" என்றான்.

"ஆண்டி! அப்படி அவர்கள், சொல்லாமலிருந்துவிட்டால், எதிர்க்கட்சிகள் இந்த விஷயங்களை வெட்ட வெளிச்சமாக்க மாட்டார்களா? மேலும், உன் கட்சிக்காரர்கள், ஏன் அப்படிப் பேசுகிறார்கள், என்பதற்கும் தகுந்த காரணம் இருக்கிறது" என்றேன். என்ன காரணம்? என்றுகேட்டான். இருக்கும் குறைபாடுகளைச்சட்டசபையில் எடுத்துக்காட்டத்தானே அனுப்பினோம், என்று ஓட்டர்கள் கேட்டுவிடுவார்களே என்ற பயம்தான், காரணம் என்றேன். ஆண்டி அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

சரி, என்று ஆண்டியப்பன் ஒத்துக்கொண்டே தீர வேண்டிய ஆதாரத்தைத் தந்தேன்; அது இது:

> எங்களுடைய சேலம் மாவட்டத்தில் கொல்லி மலையில் ஒரு ரோடும் புத்தர் கவுண்டன் பாளையத்தில் ஒரு பாலமும் கட்டப்பட்டிருக்கிறது. இவை தவிர எங்கள் சேலம் ஜில்லாவில் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் வேறு எந்தவேலையும் நடந்ததாகத் தெரியவில்லை.
>
> * * *
>
> என்னுடைய தொகுதியாகிய அரூர் தாலூகாவில் அறவே இதுவரை எந்த முன்னேற்றமும் கிடையாது. எந்தவிதமான நீர்ப்பாசன வசதியோ கிடையாது. சென்ற ஆண்டிலும் இந்த மன்றத்தில் நான் குறிப்பிட்டேன். எங்களுடைய தாலூகாவில், சேர்வராயன் மலை வடபகுதியில் வாளியாறு உற்பத்தியாகிறது, அது ஜீவநதியாகும். அதனுடைய தண்ணீரை நல்ல முறையில் விவசாயத்திற்கு உபயோகப்படுத்துவதற்காக அதன் குறுக்கே ஒரு அணை கட்டுவதற்கு வெள்ளைக்காரன் காலத்திலே திட்டத்தைப் போட்டு, அது கைவிடப்பட்டது.
>
> *
>
> மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்டுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாகிலும் எடுத்துக் கட்டினால் அரூர் தாலூகாவிலுள்ள விவசாயிகளுடைய மனம் நிம்மதி அடையும்.
>
> *
>
> நான் கிராம மக்களுடன் அடிக்கடி தொடர்புகொண்டவன். அதனால் இவைகளைப்பற்றி என்னை அடிக்கடி கேட்க வசதி இருக்கிறது. இதற்குத்தானா உங்களுக்கு ஓட்டுப் போட்டோம் என்று கேட்கிறார்கள்.

இவ்விதம் சட்டசபையில் பேசியவர், மாரியப்பன் எனும் காங்கிரஸ் உறுப்பினர், சேலம் மாவட்டம்.

நெடுநேரம், ஆண்டியப்பன் பேசவில்லை.

பிறகு, ஒரு பெருமூச்சுக் கிளம்பிற்று.

பாவிகளே! இப்படிப் பேசிப்பேசி, காங்கிரஸ் கட்சியின் மானத்தை வாங்குகிறீர்களே! இதற்குத்தானா, உங்களைக் காங்கிரஸ் கட்சி நிற்கவைத்து, எம். எல். ஏ. ஆக்கிவைத்தது. என்று கூறினான். அவ்வளவு வருத்தம் ஆண்டிக்கு.

நான் வேடிக்கையாகக் கேட்டேன், "அப்படியானால், ஆண்டி! இப்படிப்பேசிக்கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் அடுத்த தடவை, காங்கிரஸ் கட்சியிலே இடம் தரமாட்டாரோ, காமராஜர்" என்றேன்.

முறைத்துப் பார்த்தான்—தலையணையை இழுத்துப் போட்டுக்கொண்டான்—படுத்தான் உறங்க.

பேசியவை யாவும் குடையவே, கனவு கண்டான்.

தம்பி! இப்போது, முதலிலிருந்து மறுதடவை படித்துப் பார், கனவு காட்டும் கருத்து விளங்கும்.

ஆண்டியப்பன், யார், எங்கே இருக்கிறார், என்று கேட்கிறாய்—தெரிகிறது.

உன் அருகிலேயே இருக்கிறார்! காங்கிரஸ் கட்சியிலே இன்று பலர் ஆண்டியப்பன் நிலையில் உள்ளனர். மனதிலே குமுறல்—குழப்பம். அவர்களைக் கண்டு பிடித்து, பக்குவப்படுத்தி, கழகக்கொள்கைகளைப் புகுத்துவதுதான், நீ மேற்கொள்ளவேண்டிய பணி! இப்போது, தம்பி, ஆறு மணி, காலை, தூங்க முயற்சிக்கிறேன். விழிப்புற்றிரு—விடுதலைக்கு உழைக்கத் தயாராகிவிடு.

அண்ணன்,

அண்ணாதுரை

4-ம் பக்கத் தொடர்ச்சி

அமைப்பாகக் கருதிக்கொள்ளவில்லை. ஒன்று மற்றொன்றை அயல் நாடாகக் கருதி எச்சரிக்கையோடு வாழ்ந்து வருகிறது. இரு நாடுகளும் மீண்டும் ஒன்றாகும் என்பது இன்று ஜெர்மானியர்களாலேயே எள்ளிநகையாடப்படுகிறது; கேலிக்குரிய கற்பனையாகக் கருதப்படுகிறது. ஜெர்மனியின் மண்ணில் அயல் சக்திகள் புகுந்ததன் விளைவாக இன்று அவையிரண்டும் இருபெரும் நாடுகளின் விளையாட்டுப் பொருள்களாக மாறியுள்ளன.

இதனினும் பல படிகள் அப்பாற்பட்ட நிலை பெர்லினுக்கு. இரு சக்திகளிடையே "போர் எண்ண"த்தை வளர்விக்கும் பொறுப்பில் ஜெர்மனியைக் காட்டிலும் பல மடங்கு அதிக அளவில் நின்றது பெர்லின். ஜெர்மனி மூலம் மறைமுகமாக எழும் போட்டிகளையும் பொறாமைகளையும், சிக்கல்களையும் குழப்பங்களையும் நேர்முகமாகக் காட்டிக்கொண்டுவாதிடப்பெர்லின் ஒரு முக்கிய சாதனமாக அமையத் தலைப்பட்டது; சதுரங்கக் கூடமாக மாறியது. ஜெர்மனியில் மறைமுகமாக மட்டுமே 'பின்னணி' கொடுக்க முடியும் என்ற நிலை ஏற்பட்ட பின்னர், அமெரிக்காவும் பிரிட்டனும் பிரான்சும் இரஷ்யாவும் பெர்லினைத் தங்கள் நேரடிக் கவனிப்பின் மூலம் இராணுவ அடிப்படையில் ஒன்றை ஒன்று மிஞ்சும் அளவில் பலப்படுத்தின. இவ்வாறு நிலை மாறிய பெர்லினால் பல மறைமுகமான பெரும் உலகப் பிரச்சினைகளும் குழப்பங்களும் உண்டாயின. அமெரிக்கா, இரஷ்யா சம்பந்தப்பட்ட உலக அரசியல் போக்குகள் அனைத்திலும் ஏதோ ஒரு வகையில் பெர்லினோ, ஜெர்மனியோ சம்பந்தப்படத் தலைப்பட்டது. உலகக் கண்களனைத்தும் பெர்லினை நோக்கும் வண்ணம், இரு பெரும் சக்திகளிடையே குழப்பங்களை உருவாக்கும் இடமாக அது மாறியது. எனவேதான் '**உலகின் அபாயமான இடம்**' என்று அரசியல் தலைவர்கள் பெர்லினுக்குப் பொருத்தமான பெயரொன்றைச் சூட்டினார்கள்.

இதுபோன்ற ஒரு நிலையில்தான் திருப்புமுனை ஏற்படும் கட்டம் வந்தது. 1958ம் ஆண்டு நவம்பர் திங்கள் 27ம் நாள் ஜெர்மன்—பெர்லின் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டும் செயலில் முதன்முதல் இறங்கியது இரஷ்யா. இரு ஜெர்மனிகளுக்கிடையே ஒரு அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்துதல், பெர்லினை, படைகள் களையப்பட்ட ஒரு தனி சுதந்திர நகரமாக மாற்றுதல் என்ற இரு கொள்கைகள் அடங்கிய குறிப்பொன்றை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி ஆகிய சார்புள்ள நாடுகளுக்கு அனுப்பி வைத்தது. அது முதல் பெர்லின் ஜெர்மனிப் பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதில் ஒரு மறுமலர்ச்சி தோன்றியது. உலக நாடுகளனைத்தும் இப் பிரச்சினைகளுக்கு முதல் முக்கியத்துவம் கொடுத்துச் சிரத்தையோடு விவாதிக்கத் துவங்கின.

இரு ஜெர்மனிகளும் ஒன்றுபடுவதென்பது இனிச் சாத்தியமில்லை என்ற அடிப்படையை இன்று எல்லோரும் உணர்ந்திருக்கின்றனர். ஆனாலும் ஒன்றாகி வருவதை யாரும் விரும்பவில்லை என்ற எண்ணமும் எவரிடமும் இல்லை. இன்றுவரை வளர்ந்துள்ள நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரு ஜெர்மனிகளும் ஒன்றுபடுவது பாலைவனத்தில் நீர்நிலை காண்பது போல என்றுதான் எவருக்கும் எண்ணத் தோன்றும். இந்த அடிப்படையில் ஜெர்மனியைப் பற்றிச் சோவியத்யூனியன் ஏற்படுத்திக்கொள்ள விரும்பியிருக்கும் அமைதி ஒப்பந்தம் பொருளும், சாத்தியக் கூறுகளும் நிரம்பியதாக உள்ளது. எனவே ஜெர்மனி ஒன்றுபடுவது என்பது இரண்டாவது பிரச்சினை, இரு ஜெர்மனிகளிடையே அமைதி ஏற்படுத்துவதுதான் முதல் பிரச்சினை. இரு உலகப் போரில் பெரும் பொறுப்பாயிருந்த ஜெர்மனியிடமிருந்து மக்கள் இனியும் ஒரு மூன்றாவது உலகப் போரை எதிர்பார்க்காமலிருக்க, இரு ஜெர்மனிகளிடையே ஏற்படுத்தப்படும் அமைதி ஒப்பந்தம்தான்.

போர்முடிந்து 15 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்று வரையில் இராணுவ இருப்பிடம்போல் காட்சி அளித்து வரும் பெர்லினை ஒரு படைகள் களையப்பட்ட சுதந்தர நகரமாக மாற்ற நான்கு சக்திகளும் முயலுவது காலத்தால் மிகவும் தேவைப்பட்டதாக உள்ளது. "மேற்குப்பெர்லினில் இருந்தபடியே அமெரிக்காவும் பிரிட்டனும் பிரான்சும் கிழக்கு ஜெர்மனிக்கும் அதன் மூலமாக 'இரஷ்யாவுக்கும் ஊறுகள் விளைவித்து எதிர்ப்புப் பிரச்சாரம் செய்கிறது என்று குருஷ்சேவும், அதேபோல் மாற்றி ஐசனோவரும் புகார் கூறிக்கொண்டு, போர் எண்ணத்தை வளர்த்துக்கொள்ளாத ஒரு நிலை வரவேண்டுமானால், பெர்லினிருந்து பெரும் சக்திகள் தங்கள் படைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு அதை ஒரு சுதந்திர நகரமாக மாற்றுவதுதான் இன்றுள்ள ஒரே சாத்தியக்கூறு. உலகில் பெர்லின் இருப்பது ஒரு மூலை. ஆனால் இதுதான் இன்று உலக அரசியல் வட்டத்தின் மையப்புள்ளி. வட்டம் ஒழுங்காக அமையப்போவதும், ஒழுங்கில்லாமல் அமையப்போவதும் உலகின் நான்கு சக்திகளும் அமர்ந்துகொண்டிருக்கும் இந்த மையப் புள்ளியைப் பொறுத்ததுதான். எனவேதான் பிரதமர் குருஷ்சேவ்,

---

தலைமை நிலையச் செய்தி

தலைமைச் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழு—பொதுக்குழுக் கூட்டங்கள் 1960 மே திங்கள் 7, 8 (சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில், சேலம் மாவட்டம் குமாரபாளையத்தில் (பவானி அருகில்) நடைபெறும்.

மற்ற விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

'அறிவகம்' சென்னை-13
9—4—1960

—தலைமைக் கழகம்
(தி. மு. க.)

Page numbering incorrect

தனது அமெரிக்கச் சுற்றுப்பயண ஆயத்தக் கூட்டத்தில் பேசும்போது, "பெர்லின் பற்றி முடிவெடுப்பதுதான் இன்று உலகிலுள்ள பிரச்சினைகளுக்கெல்லாம் பெரிய பிரச்சினை" என்றார்.

இரஷ்யப் பிரதமரோ, ஒன்றரை ஆண்டுகட்கு முன்பு மேற்கு ஜெர்மனிப்பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அளித்த பேட்டியொன்றில் பெர்லினை ஒரு அபாயகரமான புற்றுநோய் என்று கூறி விவரித்தார். அதற்கொப்ப, புற்றுநோய் உடலின் ஒரு மூலையிலிருந்தாலும் முதலில் உடலை எரித்து பின் உயிரையே குடித்துவிடுவதுபோல் இன்று பெர்லின் உலகின் ஒரு மூலையிலிருந்தாலும் முதலில் இரு பெரும் சக்திகளையும் பாதித்துப்பின் உலகையே பாதிக்கும் நிலையில் இருக்கிறது.

பெர்லின் பிரச்சினையை உடலின் ஒரு மூலையிலுள்ள அபாயமான புற்றுநோய்க்கு ஒப்பிட்டால், ஜெர்மன் விவகாரத்தை பொதுவான உடல் நலமின்மைக்கு உவமை கூறலாம். முதலில் கவனித்துக் குணப்படுத்தவேண்டியது புற்றுநோய்; ஏனெனில் எந்த நிமிடத்திலும் அதனால் உயிரிழக்க நேரிடும். இரண்டாவதாகக் கவனிக்கவேண்டியது பொது உடல் நலமின்மை. ஏனெனில் புற்றுநோய் ஆறினும், பொது உடல்நலமின்மையேல் பயனில்லை.

ஜெர்மன் விவகாரம் என்ற பொது உடல் நலமின்மைக்கு 'மருந்து' இரு ஜெர்மனிகளிடையே வல்லரசுகளால் ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு அமைதி ஒப்பந்தம். பெர்லின் பிரச்சினை என்ற புற்று நோய்க்கு 'மருந்து' படைகள் களையப்பட்ட சுதந்திரமுள்ள தனி நகரமாக அதை மாற்றுவது.

நான்கு நாடுகளிடையே அடுத்த திங்களில் நடக்க இருக்கும் உச்சகட்ட மாநாட்டிலிருந்து இந்த இரண்டு 'மருந்து'களைத்தான், உடல் நலமும் பாதிக்கப்பட்டு, புற்று நோயாலும் அவதிப்படும் உலகம், நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. இந்த மாநாட்டில் ஜெர்மனி—பெர்லின் இவைகளைப்பற்றி எடுக்கப்படும் முடிவுகள்தான், உலகப் பயணத்தின் அடுத்த கட்டம் போரா—அமைதியா என்ற முக்கிய கேள்விக்குப் பதில் சொல்லப்போகின்றன.

★

தலைமைக் கழக அறிக்கை—4/60

தி. மு. கழகப் பொதுத்தேர்தல்

1 1959-ல் நிறைவேற்றப்பட்ட தி. மு கழகத்தின் புதிய சட்டதிட்டங்கள், விதி 29 பிரிவு 4-ன்படி கழகத்தின் பல்வேறு அமைப்புக்கான தேர்தல் நாட்கள் கீழ்க்கண்டவாறு உறுதிசெய்யப்படுகின்றன:—

(அ)	சிற்றூர்-பேரூர்க் கிளைகள்,—பெருநகர உட்கிளைகள்	... 1960 மே	22 ஞாயிறு
(ஆ)	நகரக் கிளைகள் (சென்னை நகர வட்டக் கிளைகள்—பெருநகரக் கிளைகள்)	... 1960 ஜூன்	5 ஞாயிறு
(இ)	வட்டக்கிளைகள் (சென்னை நகரம் பகுதிக் கிளைகள்)	... 1960 ஜூன்	19 ஞாயிறு
(ஈ)	மாவட்டக் கழகங்கள்—மாநில அமைப்புக் குழுக்கள்	... 1960 ஜூலை	3 ஞாயிறு
(உ)	தலைமைக் கழகம்	... 1960 ஜூலை	17 ஞாயிறு

2. இப்பொழுது புதுப்பித்தும் புதியதாகச் சேர்ந்தும், தலைமைக் கழகத்திலிருந்து உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் பெற்றிருப்பவர்கள் மட்டுமே தேர்தலில் கலந்துகொள்ள உரிமை உடையவர்கள் ஆவார்கள். (காலங்கடந்து உறுப்பினர் விண்ணப்பத் தாள்களை அனுப்பிவைத்தவர்களுக்கும் புதிதாகச் சேர விரும்புவர்களுக்கும் 1960 ஆகஸ்டு திங்கள் 1-ஆம் நாளுக்குப் பிறகுதான் உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கப்பெறும்.)

3 'நம்நாடு' இதழில் வெளியிடப்பட்டுள்ள கிளைகள் மட்டுந்தான் மேற்குறிப்பிட்டுள்ள நாட்களில் தேர்தலை நடத்த உரிமைபெற்ற கிளைகளாகும். (காலங்கடந்து விண்ணப்பத்தாள்களை அனுப்பி வைத்துள்ள கிளைகளும், புதிதாகத் தோன்றி உறுப்பினர்களைச் சேர்த்துள்ள கிளைகளும் 1960 ஆகஸ்டு 1-ஆம் நாளுக்குப் பிறகுதான் அந்தந்த வட்டச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் முறைப்படி தேர்தலை நடத்தவேண்டும்.)

4 தேர்தலை நடத்தும் முறைகள், கிளைகள், உறுப்பினர், தேர்தல் ஆணையாளர், வேட்பாளர் (அபேட்சகர்) ஆகியோரின் கடமைகள், வேட்பாளர் விண்ணப்பத்தாள் போன்ற விவரங்கள், தலைமைக் கழகம் அச்சிட்டு வெளியிட்டுள்ள 'தி. மு கழகத் தேர்தல் விதிமுறைகள்' என்ற வெளியீட்டில் விளக்கப்பட்டிருக்கின்றன. (தேர்தல் விதிமுறை வெளியீட்டை உரிய கட்டணம் செலுத்தித் தலைமைக் கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்)

'அறிவகம்' சென்னை-13
12—4—1960

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர் தி. மு. க.

எட்வர்டு போக்

இருநூறு அடி உயரம்கொண்ட மணிமண்டபம் அது. கருஞ்சிகப்பு வண்ணச் சலவைக் கற்களால் கட்டப்பட்டது. அதன் உச்சியில் பசுமை நிறைந்த செடி கொடிகள். அங்கே வண்ணக் குருவிகள் இசை பயிலும். ஒலிக்கும் ஆராய்ச்சிமணி அதன் உள்ளே இருந்து நாதம் எழுப்பும். அதன் எதிரே குளிர்ந்த நீரோடை. முழு நிலாவில் அந்த மணிமண்டபத்தின் பிம்பம் அமைதி நிறைந்த நீரோடையில் பட்டு ஊஞ்சல் ஆடும். அந்தக் காட்சியைக் கண்டாலே உள்ளத்திலே ஒருவித அமைதி சுரக்கும்.

இத்தகு காட்சியை அமெரிக்காவில் உள்ள ப்ளோரிடா என்ற நகரத்தில் காணலாம். இதற்கு, 'பாடும் மணிமண்டபம்' என்று பெயர்.

குளிர்ந்த ஏரிக்கரையின்மீது நிற்கும் அந்த மணிமண்டபத்தில் நின்று, அமைதி நிறைந்த அந்த நீரோடையில் ஒரு கல்லை விட்டெறிந்தால், வட்ட அலைகள் ஒரு வரலாற்றுப் பின்னணியைக் காண நம்மை அழைத்துச் செல்லும்.

பள்ளியிலிருந்து வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தான் அந்தப் பையன். பரட்டை முடி; கிழிந்த சொக்காய், அரைநிஜார்; தோளிலே புத்தகப்பை. இவைகள் தாம் அவனை அலங்கரித்தன. ஒரு ஏழையின் மகன் என்பதை அவனது தோற்றம் தெற்றெனக் காட்டியது. பசி வயிற்றைக் கிள்ள, அந்தப் பையனின் நடை வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

வழியிலே ரொட்டிக்கடை ஒன்று அவன் பார்வையிலே பட்டது. ரொட்டிகளை மிக நேர்த்தியாக அடுக்கிவைத்திருந்தான் கடைக்காரன். அவைகளைப் பார்த்தவுடன் அவன் நாவில் நீர் சுரந்தது.

"தம்பி! ரொட்டிகள் பார்ப்பதற்கு நன்றாக இல்லை?" கடைக்காரன் அந்த பையனிடம் போட்ட கேள்வி இது.

"நன்றாக இருக்கும், உன்னுடைய சன்னல் சுத்தமாக இருந்தால்" இது கடைகாரனுக்கு பையன் அளித்த பதில்.

"அதற்கு நீதான் சரியான ஆள். எனக்காக அந்த வேலையை மேற்கொள்ளுகிறாயா?" இது கடைக்காரன்.

எட்வர்டு போக் என்ற டச்சுப் பையனுக்குக் கிடைத்த முதல் வேலை அது. ரொட்டிக்கடையில் சன்னலைச் சுத்தம்செய்யவேண்டும்.

❊ நா. ஆர்வி ❊

இந்த வேலையில் அவனுக்குச் சம்பளம் வாரத்திற்கு இரண்டு ஷில்லிங். அவனுக்கு இது புதையல் போல! காரணம் அவனைப் பெற்றவர்கள் ஏழை. எனவே பள்ளிப் பருவத்தில் பாடுபடும் பாட்டாளியாக மாறினான். பள்ளி நேரம் போக மிகுதி நேரத்தில், வீதிகளில் சுள்ளிகளையும், கரித்துண்டுகளையும்பொறுக்கியவனுக்கு,வேலை கிடைத்தால் மகிழ்ச்சி இராதா?

*

பின்னர், எட்வர்டு போக் அமெரிக்காவிற்கு வந்தான். ஆறு ஆண்டுகள் கல்வி பயின்ற அந்த டச்சு இளைஞனுக்கு ஆங்கிலத்தில் ஒரு வார்த்தைக்கூடத் தெரியாது. அப்படிப்பட்ட அந்த இளைஞன் பின்னால் அமெரிக்க பத்திரிகை உலகில் மகளிர் இதழ் ஒன்றுக்கு ஆசிரியரானான்.

பெண்கள் எதை விரும்பிப் படிப்பார்கள் என்பதை முழுக்க முழுக்கத் தெரியாத போக், பெண்களுக்கென ஒரு இதழை நிறுவினான். அந்த இதழ் உலகம் எங்கும் பரவியது. அதன் வளர்ச்சி நாளுக்கு நாள் வளர்ந்தது. அந்த இதழை ஆரம்பித்த எட்வர்டு போக், ஆசிரியர் வேலையிலிருந்து ஓய்வு பெறுகின்ற நேரத்தில் 2,000000 பிரதிகள் விற்பனையாயின. அந்த இதழில், ஒரு இதழின் மேல் அட்டைகளுக்கு மட்டும் விளம்பர வருவாய் 200000 பவுன்கள்.

இந்தப் பிரபல பத்திரிகையின் பெயர் "லேடிஸ் ஹோம் ஜேர்னல்" என்பதாகும். முப்பது ஆண்டுகள் அதன் ஆசிரியராகப் பணியாற்றியவர் எட்வர்டு போக்.

*

ரொட்டிக் கடையில் சன்னல் சுத்தம் செய்த நேரம் போக, மிகுதி நேரங்களில் வேறு வேலை தேடும் படலத்தில் ஈடுபடுவான் போக். அஞ்சல் தலை சேகரிக்க ஆவல் கொள்ளும் இளம் உள்ளத்தில் வயிற்றுக் கவலை வாட்டியது. குடும்பத்திற்குச் சோறு போட வேண்டிய நிலை ஏற்பட்டது. அவனை ஒத்த வயதினர் குதித்துக் கும்மாளம் போட்ட நேரத்தில், போக் குதிக்கால் தேய ஓடி உழைப்பான். காலையில் செய்தித்தாள் விற்பான். நடுப்பகலில் குளிர் நீர் வண்டி தள்ளுவான். மாலையில் பெரிய இடத்தில் தேனீர் விருந்தில் கூலி வேலை செய்வான். இப்படியாக வாரத்தில் ஐந்து பவுன் வருமானம் கிடைக்கும். இந்த வருவாய் முழுதும் பள்ளி நேரத்தில் அல்ல! ஓய்வு நேரத்தில்!

பதின்மூன்றாவது வயதில் பள்ளிக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு, ஒரு அலுவலகத்தில் ஆபீஸ் பையனாகப் பணியாற்றத் தொடங்கினான் போக். வறுமைதான் படிப்பை விட்டு, போக்கைப் பணி

மனைக்கு துரத்தியது. பள்ளியிலிருந்து வெளியேறினானேயன்றி, படிக்கும் நாட்டம் அவன் உள்ளத்திலிருந்து வெளியேறவில்லை. படிக்க வேண்டும் என்ற ஆர்வம் அவன் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்தது. தனக்குத்தானே, ஆசிரியர் இன்றிக் கல்விகற்றுக்கொண்டான் போக்.

தேனீர், சினிமா, சிற்றுண்டி போன்றவைகளில் கிடைக்கும் பணத்தைச் சேமித்து வைத்து, அவைகளுக்கு அமெரிக்காவில் உள்ள பல பெரியார்களின் வாழ்க்கை ஏடுகளை வாங்கிபடிக்கத் தொடங்கினான். பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள் போக்கின் உள்ளத்தை ஈர்த்தன. அமெரிக்காவில் அவன் அறியாத அறிஞர்களின் வாழ்க்கைக் குறிப்பே இல்லை என்ற அளவுக்கு அவன் முயற்சி சென்றது.

ஒரு முறை ஜெனரல் ஜேம்ஸ் கார்பீல்டு என்பவர் ஜனாதிபதி தேர்தலுக்குப் போட்டியிட்டார். அவரது வரலாற்றுக் குறிப்பை அறிந்த போக், கார்பீல்டுக்குக் கடிதம் ஒன்று வரைந்தான். அதில்: தாங்கள் ஒருமுறை சிறுவனாக இருக்கையில் படகு ஓட்டியிருக்கிறீர்கள் என்பதைப் போக், கார்பீல்டுக்கு நினைவுபடுத்தினான். செய்தி அறிந்த கார்பீல்டு, பதினான்கு வயது நிரம்பிய போக்கை அழைத்து விருந்து வைத்தார். படம் ஒன்று வரைந்து பரிசு அளித்தார். போக்கிடம் பல மணி நேரம் உரையாடினார்.

ஆபீஸ் பையனாக இருந்த போக் பின்னர் தொலைபேசித் துறையில் வாரம் ஒன்றுக்கு இருபத்து ஐந்து ஷில்லிங் சம்பளத்தில்பணியாற்றத் தொடங்கினான். இத்துறையில் பணியாற்றியபோக்கிற்குப்பல பெரியார்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. ஆப்ரஹாம் லிங்கன்; எமர்சன்; லாங்பெல்லோ போன்ற அறிஞர்களைச் சந்தித்தான் போக். இவர்களின் சந்திப்பு போக்கின் உள்ளத்தில் ஒரு திருப்பத்தை உண்டாக்கியது. பெருமையைத் தந்தது. தன்னம்பிக்கை உள்ளத்திலே துளிர்த்தது.

ஒருநாள் போக் வீதியில் நடந்துகொண்டிருந்தார். அப்போது எதிரே வந்த ஒருவன் சிகரட் பெட்டியைத் திறந்து சிகரட் ஒன்றை எடுத்து நெருப்பு வைத்தான். கையில் இருந்த அட்டை ஒன்றை எடுத்து வீதியில் வீசி விட்டு நடந்தான். அவ்வழியே சென்ற போக், அவன் எறிந்த அட்டையை எடுத்துப் பார்த்தார். அதில் ஒரு அறிஞரின் புகைப்படம் இருந்தது. படத்தின் மறுபுறம் புரட்டிப்பார்த்தார். வெற்று இடமாக விடப்பட்டிருந்தது. போக் எண்ணினார்: இந்தப் புகைப்படத்துடன், இந்த அறிஞரின் வரலாற்றுக் குறிப்பு வெளியாகி இருந்தால், இந்தப் புகைப் படம் கீழே விழுந்திருக்காது—என்று.

இந்த நிகழ்ச்சி போக்கை ஒரு புதிய துறைக்கு ஈடுபாடுகொள்ள வைத்தது.

வீதியில் எடுத்தபுகைப்படத்தை எடுத்துக்கொண்டு அதை வெளியிட்ட கம்பெனிக்குசென்றார் போக். கம்பெனிக்காரர்களிடம் உரையாடி இந்தப் புகைப்படத்துடன், அவரின் வரலாற்றுச் சுருக்கத்தோடு பல நூறு அச்சிட்டுக் கொடுத்தால் அவைகளை விற்பனை செய்வதாகக் கூறினார். அதன்படியே கம்பெனியாரும் போக்கின் சொல்லிற்கு இணங்கினர். இதனால் போக்கிற்கும், கம்பெனியாருக்கும் நல்ல வருமானம் கிடைத்தது.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு போக், தொலைபேசித் துறையில் பார்த்து வந்த வேலைக்கு ஒரு வணக்கம் சொல்லிவிட்டு, பிரசுரத் துறைக்கு நடைபோட்டார். இவரை இத்துறைக்கு அனுப்பியது வீதியில் கிடைத்த அட்டைப் படம் தான்.

*

பின்னர் போக் தனது இருபத்து ஆறாம் வயதில் ப்ளோரிடா நகருக்கு சென்றார். "லேடிஸ் ஹோம் ஜோர்னல்" என்ற பெண்களுக்கான சஞ்சிகை ஒன்றைத் துவக்கினார். இந்த மகளிர் ஏடு, பத்திரிகை உலகில் ஒரு நிரந்தர இடம் பெற்றது. இதன் மூலம் அமெரிக்கப் பத்திரிகை உலகில், எழுத்துலகில் தனக்கென ஒரு இடம் அமைத்துக் கொண்டார். பெருமையும், புகழும், பொருட் செல்வமும் போக்கை அணைத்துக்கொண்டன.

இப்படிப்பட்ட செல்வ நிலையால் போக் புகழ் பெற்றார் என்று சொல்லிவிட முடியாது. பல அரும் பெரும் காரியங்களைச் சாதித்தவர் போக். உணவை அருந்துவதில் சுத்தமாக இருக்கப் பல அறிவுரை வழங்கி இருக்கிறார். நகரங்கள் காண்பதற்குக் கவர்ச்சியாக இருக்கவேண்டும் என்று புரட்சி செய்திருக்கிறார் போக். எனவே அத்துறையில் ஒரு கட்டட அமைப்பு வல்லுனராக இருந்து பணியாற்றியவர் போக். விக்டோரியா மகாராணி காலத்திய கட்டட அமைப்பு முறையை மாற்றிப் புதிய முறையில் புரட்சி கண்டவர் போக். வீடுகளை வரிசையாகவும்; நகரங்களை அழகாகவும் இருக்க வழி அமைத்தவர் போக்.

அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் போக்கைப் பற்றிக் குறிப்பிடுகையில் சொல்கிறார் "நான் கேள்விப்பட்ட வரையில் எட்வர்டு போக் ஒருவர்தான் கட்டடக் கலைத்துறையில் ஒரு சிறந்த புரட்சியைச் செய்தவர்" என்று.

தன்னுடைய ஓய்வு நாட்களில் போக் பல அழகிய பூங்காக்களையும் தோட்டங்களையும் ஏற்படுத்தி இருக்கிறார். தன்னுடைய நாடான ஹாலந்து நாட்டிலிருந்து மின் விளக்குகள் தருவித்து, அமெரிக்க வீதிகளை அழகு படுத்தியிருக்கிறார். புகை வண்டி நிலையங்களில் இருபுறமும் வண்ணமலர்ச் செடிகளை அமைத்து பொலிவு தந்தவர் போக்.

இளமைப் பருவத்தில் ரொட்டிக் கடைக்காரனிடம் ரொட்டி வரிசை, அழகாய்க் காட்சிதரவேண்டுமானால், சன்னல் சுத்தமாய் இருக்கவேண்டும் என்றார். பின்னர் நாடு அழகாய் இருக்கவேண்டுமானால் கட்டடங்கள் கவர்ச்சியாய் இருக்கவேண்டும் எனக் கண்டார். செயல்பட்டார். உழைத்தார். நமது நாடும் அழகாய் இருக்கவேண்டுமானால் போக்குகள் தோன்றவேண்டும்.

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.